
# திருக்கோயில்



முகப்பு
ங்குன்றம் அருள்மிகு
ணிய சுவாமி ஆலய
கப்புத் தோற்றம்

மார்ச்சு
1999

விலை
ரூபாய் ஐந்து






சென்னையிலுள்ள அருள்மிகு சென்னமல்லீசுவரர் திருக்கோயில் திருக்குடநீராட்டு விழா 29.1.99 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணை யாளர் திருமிகு சுகவனேஸ்வர் இ.ஆ.ப., கூடுதல் ஆணையாளர் திரு. எஸ். கனகைய்யா, பி.எஸ்.சி, பி.எல். ஆகியோர் இவ்விழாவில் பங்கேற்றுச்சிறப்பித்தார்கள். பரம்பரை தர்மகர்த்தா திரு மணலி இராம கிருஷ்ண முதலியார், பி.ஏ. மற்றும் மேலாளர் அ. தனபாலன், பி.ஏ. ஆகியோர் திருக்குட நீராட்டு விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

# திருக்கோயில்



திங்கள் இதழ்



| | | |
|---|---|---|
| தனி இதழ் | : | ரூ. 5.00 |
| ஆண்டு உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 60.00 |
| ஆயுள் உறுப்பினர் கட்டணம் | : | ரூ. 500.00 |


| மாலை | திருவள்ளுவர் ஆண்டு 2030 | வெகுதானிய ஆண்டு பங்குனி | மணி |
|---|---|---|---|
| 41 | மார்ச்சு 1999 | | 3 |



சிறப்பாசிரியர்

*சுகவனேஸ்வர்*, இ.ஆ.ப.,
சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர்

ஆசிரியர்

*முனைவர் த. அமிர்தலிங்கம்,*
எம்.ஏ., பி.எச்.டி.,

திருக்கோயில் நிர்வாகக் குழுவினர்

**திரு எஸ். கனகய்யா,** பி.எஸ்.சி., பிஎல்.,
கூடுதல் ஆணையாளர்

**திரு த. சுந்தரம்,** பி.ஏ., பி.எல்.,
இணை ஆணையாளர், தலைமை இடம்

**திரு மு. இராமச்சந்திரன்,** பி.ஏ.,
ஆணையாளரின் நேர்முக உதவியாளர்

**திரு தி. ஜெயராமன்,** பி.ஏ.பி.எல்.,
இணை ஆணையாளர் - செயல் அலுவலர்
அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி
திருக்கோயில், பழநி.


முகப்பு

திருப்பரங்குன்றம் அருள்மிகு
சுப்பிரமணிய சுவாமி ஆலய
முகப்புத் தோற்றம்

பொருளடக்கம்


*அருள்மிகு உமையம்மை 108 போற்றி*

*மாசி மகம்*
- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

*குழந்தை பாக்கியம் பெறக் கைதொழுவீர்*
*அன்னை கர்ப்பரட்சாம்பிகை*

*திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி*
*திருக்கோயில்*

*மகப்பேறு அளிக்கும் மகோன்னத லிங்கம்*
- நிறைமதி

*அப்பரடிகள்*
- கலைமாமணி அருளரசு மாசிலாமணி

*வள்ளிச் சன்மார்க்கம்*
- திருப்புகழ் மாமணி மு. அருணகிரி

*கம்பன் கண்ட பரதன்*
- முனைவர் இரா. செல்வகணபதி

*கம்பனும் திருமுறைகளும்*
- கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

*மகாகவி பிள்ளையவர்கள் அளித்த மாபெரும் விருந்து*
- அங்கயற்கண்ணி அடிமை



உறுப்பினர் கட்டணம் அனுப்பவேண்டிய முகவரி :
**உயர்திரு ஆணையாளர் அவர்கள்**

திருக்கோயில்
இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை
*119, உத்தமர் காந்தி சாலை, சென்னை - 600 034.*

தொலைபேசி : *8279407*

# அருள்மிகு உமையம்மை 108 போற்றி

**அருள் வேண்டுதல் (சங்கற்பம்)**

நாளும் கோளும் நன்னிலை பொருந்திய இந் நன்னாளில் ...................... அவர்கட்கும் அவர்கள் குடும்பத்தார்க்கும், சுற்றத்தார்க்கும், சமூகத்தார்க்கும், உலகுயிர்கட்கும், அறம், பொருள், இன்பம், வீடு எனும் நாற்பயனும் பொருந்தி நன்னிலை பெருகவும், நீண்ட வாழ்நாள் பெருகவும், திருவருள் பெருகவும், மங்கள வாழ்வெய்தவும் உம் திருவடிகளில் மலர் தூவி வழிபாடு செய்கின்றோம்.

**உமையம்மை 8 போற்றிகள்**

1. ஓம் அகர முதலென ஆனாய் போற்றி
2. ஓம் ஆகமப் பொருளாய் நிறைந்தாய் போற்றி
3. ஓம் உள்ளக் கோயில் விளக்கே போற்றி
4. ஓம் ஐந்தொழில் இயற்றும் அரசே போற்றி
5. ஓம் கரும்பின் இனிய மொழியாய் போற்றி
6. ஓம் சிந்தை குடிபுகும் சிவையே போற்றி
7. ஓம் மலைவளர் காதலி உமையே போற்றி
8. ஓம் வேதநாயகி போற்றி போற்றி

**உமையம்மை 16 போற்றிகள்**

1. ஓம் அகர முதலென ஆனாய் போற்றி
2. ஓம் ஆகமப் பொருளாய் நிறைந்தாய் போற்றி.
3. ஓம் இமய மடக்கொடித் தாயே போற்றி
4. ஓம் ஈசர் பாகத்து உறைவாய் போற்றி
5. ஓம் உலகெலாம் ஈன்ற உமையே போற்றி
6. ஓம் எல்லா உலகமும் ஆனாய் போற்றி
7. ஓம் ஏழிசை வல்லி எந்தாய் போற்றி
8. ஓம் ஒளிரும் ஒளிக்கு இடமே போற்றி
9. ஓம் ஓசை ஒலி எலாம் ஆனாய் போற்றி
10. ஓம் ஐந்தெழுத்துப் பொருள் ஆனாய் போற்றி
11. ஓம் கண்ணார் அமுதக் கடலே போற்றி
12. ஓம் தமிழின் இனிய சுவையே போற்றி
13. ஓம் பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி
14. ஓம் பிறவிப் பிணிக்கோர் மருந்தே போற்றி
15. ஓம் வேண்ட முழுதும் தருவாய் போற்றி
16. ஓம் வேத நாயகி போற்றி போற்றி

**அருள்மிகு உமையம்மை 108 போற்றிகள்**

1. ஓம் அகர முதலென ஆனாய் போற்றி
2. ஓம் அகில உலகுக்கும் அன்னாய் போற்றி
3. ஓம் அஞ்செஞ் சீரடி அமுதே போற்றி
4. ஓம் அடியவர்க் கின்பம் அருள்வாய் போற்றி
5. ஓம் அடியார் உளத்துள் விளக்கே போற்றி
6. ஓம் அடியார் வினைகெட ஆள்வாய் போற்றி
7. ஓம் அணுகா தவர்க்குப் பிணியே போற்றி
8. ஓம் அணுவிலும் சிறிய அணுவே போற்றி
9. ஓம் அண்டம் யாவையும் பூத்தாய் போற்றி
10. ஓம் அரவ முடியில் இருப்பாய் போற்றி
11. ஓம் அருள்சூல் கொண்ட அம்மா போற்றி
12. ஓம் அருள்நிறை கடலே அமுதே போற்றி
13. ஓம் அழகன் முருகனை அளித்தாய் போற்றி
14. ஓம் அறத்தின் வடிவே அருளே போற்றி
15. ஓம் அறிவும் மகிழ்வும் அருள்வாய் போற்றி
16. ஓம் அறுவர்க்கு இளைய நங்காய் போற்றி
17. ஓம் ஆகமப் பொருளாய் நிறைந்தாய் போற்றி
18. ஓம் ஆசை தீரக் கொடுப்பாய் போற்றி
19. ஓம் ஆடகத் தாமரை அணங்கே போற்றி
20. ஓம் ஆடல் கண்டருளிய அணங்கே போற்றி
21. ஓம் ஆதி முதலே அருளே போற்றி
22. ஓம் ஆயிரம் திருப்பெயர் உடையாய் போற்றி
23. ஓம் ஆரா அமுதம் ஆனாய் போற்றி
24. ஓம் ஆருயிர் வளர்க்கும் மருந்தே போற்றி
25. ஓம் ஆலம் அமுதுசெய் அன்னாய் போற்றி
26. ஓம் ஆறா தாரத்து அமர்ந்தாய் போற்றி
27. ஓம் இமயமடக்கொடித் தாயே போற்றி
28. ஓம் இமவான் பெற்ற தவமே போற்றி
29. ஓம் இரவாய் பகவாய் விரிந்தாய் போற்றி
30. ஓம் இருமையும் உதவும் எம் தாயே போற்றி
31. ஓம் ஈசர் பாகத்து உறைவாய் போற்றி
32. ஓம் உயிர்க்கு உயிராம் உணர்வே போற்றி
33. ஓம் உலகெலாம் ஈன்ற உமையே போற்றி
34. ஓம் உள்ளக் கோயில் விளக்கே போற்றி
35. ஓம் எல்லா உலகமும் ஆனாய் போற்றி
36. ஓம் ஏதம் அகற்றும் மாதே போற்றி

37. ஓம் ஏழிசை வல்லி எந்தாய் போற்றி
38. ஓம் ஒளிமதிச் செஞ்சடை உடையாய் போற்றி
39. ஓம் ஒளிரும் ஒளிக்கு இடமே போற்றி
40. ஓம் ஒன்றில் விரிந்த பலவே போற்றி
41. ஓம் ஓங்கார உட்பொருள் உமையே போற்றி
42. ஓம் ஓசை ஒலிஎலாம் ஆனாய் போற்றி
43. ஓம் ஓத அரிய உணர்வே போற்றி
44. ஓம் ஐங்கரன் தன்னை அளித்தாய் போற்றி
45. ஓம் ஐந்தெழுத்துட் பொருள் ஆனாய் போற்றி
46. ஓம் ஐந்தொழில் இயற்றும் அரசே போற்றி
47. ஓம் கடவுள் மணியே கதிரே போற்றி
48. ஓம் கண்ணார் அமுதக் கடலே போற்றி
49. ஓம் கண்ணே கண்ணின் மணியே போற்றி
50. ஓம் கயிலைப் பதமருள் கருணை போற்றி
51. ஓம் கருமையில் அழகிய கலையே போற்றி
52. ஓம் கரும்பின் இனிய மொழியாய் போற்றி
53. ஓம் கற்பகத் தருவே கலையே போற்றி
54. ஓம் கன்னியர் நோன்பு உகப்பாய் போற்றி
55. ஓம் காவியங் கண்ணி உமையே போற்றி
56. ஓம் கானகம் உகந்த காளீ போற்றி
57. ஓம் குவளை மலர்க்கண் கொண்டாய் போற்றி
58. ஓம் கொன்றை வேய்ந்த குழலாய் போற்றி
59. ஓம் சங்கர னார்மனை விளக்கே போற்றி
60. ஓம் சிந்தை குடிபுகும் சிவையே போற்றி
61. ஓம் சிறக்கும் கமலத் திருவே போற்றி
62. ஓம் சீர்சால் வரமருள் தாயே போற்றி
63. ஓம் தமிழின் இனிய சுவையே போற்றி
64. ஓம் தாருகன் பேருரம் கிழித்தாய் போற்றி
65. ஓம் திருநீற்று ஒளியே திறமே போற்றி
66. ஓம் தீபச்சுடராய்த் திகழ்வாய் போற்றி
67. ஓம் தூயர் உளத்தில் இருப்பாய் போற்றி
68. ஓம் தேடற்கு அரிய நிதியே போற்றி
69. ஓம் தோன்றாத் துணைக்கோர் துணையே போற்றி
70. ஓம் நஞ்சமு தாக்கிய நங்காய் போற்றி
71. ஓம் நறுமா மலர்ச் சடையாய் போற்றி
72. ஓம் நாயகி நாரணி நான்முகி போற்றி
73. ஓம் பஞ்சினும் மெல்லடிப் பாவாய் போற்றி
74. ஓம் பண்ணார் இன்தமிழ்ப் பாவாய் போற்றி
75. ஓம் பழமறைப் பொருளே பயனே போற்றி
76. ஓம் பனிமாவ் இமயப் பிடியே போற்றி
77. ஓம் பாசம் அங்குசம் உடையாய் போற்றி
78. ஓம் பாடுவார் பாடல் உகப்பாய் போற்றி
79. ஓம் பாலினும் நன்மொழிப் பாவாய் போற்றி
80. ஓம் பிறவிப் பிணிக்கோர் மருந்தே போற்றி
81. ஓம் பிள்ளைச் செல்வம் அருள்வாய் போற்றி
82. ஓம் புவித்தலம் அனைத்தும் பூத்தாய் போற்றி
83. ஓம் பூதம் ஐந்தாய் விரிந்தாய் போற்றி
84. ஓம் மகிடன் தலைமேல் அந்தரி போற்றி
85. ஓம் மங்கல மங்கையர் தவமே போற்றி
86. ஓம் மஞ்சள் குங்குமம் காப்பாய் போற்றி
87. ஓம் மணியே மணியின் ஒளியே போற்றி
88. ஓம் மருளில் விளைந்த தெருளே போற்றி
89. ஓம் மலரே மலரின் மணமே போற்றி
90. ஓம் மலைவளர் காதலி உமையே போற்றி
91. ஓம் மலையவன் மகளாய் உதித்தாய் போற்றி
92. ஓம் மரகத மணியின் ஒளியே போற்றி
93. ஓம் முத்தலைச் சூல முதல்வீ போற்றி
94. ஓம் முப்பத் திரண்டறம் வளர்ப்பாய் போற்றி
95. ஓம் முப்புரம் எரித்த முதல்வீ போற்றி
96. ஓம் முழுவதும் ஈன்ற முதலே போற்றி
97. ஓம் மூவா முகுந்தற்கு இளையாய் போற்றி
98. ஓம் மோகம் அழிக்கும் முதல்வீ போற்றி
99. ஓம் யாவர்க்கும் மேலை இறைவி போற்றி
100. ஓம் யாழினும் இனிய மொழியாய் போற்றி
101. ஓம் வஞ்சகர் நெஞ்சில் வாராய் போற்றி
102. ஓம் வம்பில் பழுத்த கனியே போற்றி
103. ஓம் வாசமலர் எலாம் ஆனாய் போற்றி
104. ஓம் வெற்றி வெல்போர்க் கொற்றவை போற்றி
105. ஓம் வேண்ட முழுதும் தருவாய் போற்றி
106. ஓம் வேண்டுவோர் வேண்டுவ ஈவாய் போற்றி
107. ஓம் வேதத் தொடையின் பயனே போற்றி
108. ஓம் வேத நாயகி போற்றி போற்றி

பாடல்

**அருள்மிகு உமையம்மை**

நிறைவாக அவ்வத் தலத்திற்கு உரிய அம்மையின் பாடல் ஒன்றினை ஓதிப் போற்றியை நிறைவு செய்யலாம்.

**வாழ்த்துடன் பிரசாதம் அளித்தல்**

அருள்மிகு உமையம்மை அருள் முழுமையாக உங்களுக்குக் கிடைப்பதாகுக. உங்களின் எல்லா விருப்பங்களும் நிறைவேறுக! மங்களம் உண்டாகுக!.

★★★

# மாசி மகம்

- திருமதி மீனாட்சி கோகுலவாசன்

மாசிமகம் என்பது, மாசிமாதம் சந்திரன் சிம்ம ராசியில், மகம் நட்சத்திரத்தில் பிரவேசிக்கும் நாளாகும். அன்று திருமுருகன் கோவில்களில் விசேஷமான பூஜைகள், விழாக்கள் நடைபெறும்.

மாசிமகம் விரதம் இருப்பவர்கள், ஒரு வாரத்திற்கு முன்பே விரதம் மேற்கொண்டு, கோவிலுக்குக் குடும்பத்தோடு வந்து, முடிகாணிக்கை செலுத்தியும், மற்ற காணிக்கைகள் செலுத்தியும் பலர் வழிபாடு செய்வார்கள்.

மக நட்சத்திரத்தின் அதிபதி கேது. ஜோதிட முறைப்படி கேது மோட்க்ஷக்காரகன். மோட்க்ஷம் பெறுபவர்களுக்கு, மறு பிறவி இல்லை என்பதும் இந்துமத நம்பிக்கைகளில் ஒன்று. மேலும் குழந்தை செல்வம் இல்லாதவர்கள் விரதமிருந்து, அன்னதானம் செய்தால், புத்ரபாக்யம் கிடைக்கும் என்பது நம் முன்னோர்களின் நம்பிக்கையும் ஆகும்.

இந்த மாசிமகம் வருடந்தோறும் விசேஷமானதாகக் கருதப்பட்டாலும், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை, கும்பகோணம் ஆதிகும்பேசுவரர் கோவிலில், 'மகாமகம்' என்ற பெயரில் மிகப்பெரிய விழாவாகக் கொண்டாடப்படுகிறது. மாமாங்கத்துக்கு இந்தியாவின் எல்லாப்பகுதிகளிலிருந்தும் மக்கள் இலட்சக்கணக்கில் வந்து கலந்து கொள்வார்கள். அப்படிக் கலந்து கொள்பவர்கள் பூர்வ ஜென்ம பாபங்களிலிருந்து விடுபடுவர்; விலகும் என்பதும் நம் இந்து தர்மத்தின் நம்பிக்கையாகும்.

மகம் நட்சத்திரம் சிம்மராசி; சிம்மராசி சூரியனுடைய வீடு. சூரியனுடைய வீட்டில் சந்திரன் வருவதும், கும்பராசியிலிருந்து சூரியன், சந்திரனைப் பார்ப்பதும் விசேஷமானவை. அதனால் மார்கழி மாதத்திலிருந்து சூரியனின் பார்வை பெறும் ராசிகளுடைய மாதங்களில், எல்லாக் கோவில்களிலும் சிறப்பான வழிபாடுகளும், விழாக்களும், குடும்பங்களில் அனுஷ்டானங்கள், விரதங்கள் போன்றவை நடக்கக் காரணமாகின்றன.

விரதங்கள் எல்லாவற்றிலும் ஒவ்வொரு கோணங்களிலும் சூரியனின் தொடர்பு இருப்பதாகப் பெரியவர்கள் கூறுவார்கள்.

மாசி மகத்தன்று விரதம் இருப்பவர் களுக்கு மறு பிறவி இல்லை என்று ஜோதிட நூல்கள் கூறுகின்றனவாம்.

மாசி மாதம் சிவராத்திரி விழா, காளஹஸ்தியில் சிறப்பாக நடைபெறுகிறது. மாசிமாதம் திருவெண்காட்டில் இந்திரப்பேறு விழா நடைபெறுகிறது. (தஞ்சை மாவட்டம்) மாசிமகம் கும்பகோணத்தில் சிறப்பாக, மாமாங்கம் என்று பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. அச்சமயம் அனைத்துப் புண்ணிய நதிகளும் வந்து சங்கமிப்பதாக ஐதிகம் உண்டு.

வேதாரண்யத்தில் ஆனந்த நடனம் புரியும் பெருமானை குருவாரந்தோறும் தியானம் செய்தும், மாசிமகநட்சத்திரத்திலே வேத நதியில் நீராடியும் வழிபட்டு வந்தால் விரும்பிய போகங்களைப் பெற்று, வாழலாம்.

மாசி மகத்தன்று ஸ்ரீகாளஹஸ்தியில், சூரிய உதயகாலத்தில், பொன் முகலியில் நீராட வேண்டும்.

இச்சிவலிங்கத்தை நூற்றி எட்டு தரம் வலம் வரவேண்டும்; நூற்றி எட்டு முறை நமஸ்காரம் (அங்கம் பூமியில் படும்படி) செய்ய வேண்டும். நூற்றி எட்டு முறை பஞ்சாக்ஷரம் உச்சரிக்க வேண்டும்.

இதேபோல் மாசிமகம் முதல் மறுமாசிமகம் வரை தினந்தோறும் விரதம் அனுஷ்டித்தால் நற்புத்திர பாக்கியம் கிடைக்கும் என்று பிரம்மனுக்கு ஈஸ்வரன் கூறியருளினார்.

திருமணமாகிப் பல வருடங்கள் மகப்பேறு இல்லாதவர்கள் இத்தலத்தில் விரதம் பூண்டு அத்தகைய பேற்றினைப் பெற்று வருகின்றனர் என்று அறிஞர்களின் எழுத்துக்களில் அறியலாம்.

**மகாமகம்**

ஒரு சமயம் பேரூழி நீர்ப்பெருக்கெடுத்த பொழுது, உலக உயிர்கள் அனைத்தையும் அமுத குடத்தில் இறைவன் ஒன்றுசேர்த்தான்.

பின் வேட உருவில் இறைவனே அம்பினால் குடத்தை அடித்தான்.

அப்பொழுது உடைந்த மூக்கின் வழியாக நாற்புறமும் அமுதம் பரவியது.

குடம் - கும்பம், கோணம் - மூக்கு, குடமூக்கு - கும்பகோணம்.

உலகைப் படைப்பதற்கு ஆயத்தமான இறைவன் முதலில் தம் திருக்கரத்தால், 'அமிர்த குடத்தில்' தன்னையே உண்டாக்கிய காரணத்தால், 'ஸ்ரீ ஆதி கும்பேசுவரர்' என்றழைக்கப்படுகிறார்.

அமிர்தம் நிறைந்த இடத்தில் இறைவன் உண்டான காரணத்தால், 'அமுதலிங்கேசர்' என்ற திரு நாமத்தையும் கொண்ட ஈசன், மங்களாம்பிகை என்ற திருநாமம் கொண்ட உமாதேவியுடன் காட்சியளித்து அண்டிவரும் பக்தர்களுக்கு அருள் பாலிக்கிறார்.

இன்று நம்மால் கும்பகோணம் என்று அழைக்கப்படும் 'குடந்தை' எனும் திருத்தலம், தேவாரத்தில் குடமூக்கு எனக் கூறப்படுகிறது.

மூர்த்தி, தலம், தீர்த்தம் இம்மூன்றினாலும் சிறப்புறத்திகழும் இத்தலத்தை, 'பாஸ்கர க்ஷேத்திரம்' என்று அழைக்கின்றனர்.

ஒன்பது முக்கிய தீர்த்தங்கள் கும்பகோணத்தைச் சூழ்ந்து நிற்கின்றன. அவற்றுள் ஒரு முறை நீராடினாலே நம் பாவங்களைப் போக்கும் சக்தி வாய்ந்தவைகள். அவைகளாவன; கங்கை, யமுனை, சரஸ்வதி, கோதாவரி, நருமதை, சிந்து காவேரி, வேகவதி முதலிய பெருந்தீர்த்த மாதாக்களாவார்கள். இவர்கள் தங்களிடம் சேர்ந்துள்ள பாவங்களைப் போக்கிக் கொள்ள மகாமகத்திற்கு ஓராண்டுக்கு முன்னரே இங்கு ஒன்று சேர்வதால், 'பகுதீர்த்தம்' என்றும் அவர்கள் நீராடிப் பேறு பெற்றமையால் 'கன்னியா தீர்த்தம்' என்றும், அமுத கும்பத்திலிருந்து வழிந்தோடிய அமுதத்தின் ஒரு பகுதி இதனுள் தங்கியதால், 'அமுத தீர்த்தம்' என்றும், இவ்வனைத்துச் சிறப்புகளைப் பெற்றதால் 'மகாமகத்தீர்த்தம்' என்றும் அழைக்கப் படுகிறது என்று புராணங்கள் கூறுகின்றன.

தேவ குருவாகிய பிரகஸ்பதி, சிம்ம ராசியை அடைந்து, அந்த சிம்மராசிக்குரிய சூரியன் தன் மகன் சனியின் வீடுகளில் ஏழாமிடமான கும்ப ராசியில் சேர்ந்து நிற்க, பௌர்ணமியன்று மகநட்சத்திரத்தில் சந்திரன் சிம்மராசியில் நிற்கின்ற குருவுடன் சேர இவ்விருவரையும் சூரியனும் - சூரியனை இவ்விருவரும் முழுமையாகப் பார்க்கும் நாளில் வருவதே மகாமகப் புண்ணியகாலம்.

பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மட்டுமே வருகின்ற இத்தகைய மகாமகப் புண்ணிய தினமான மாசிமகத்தில், மகாமகத் தீர்த்தத்தில் நீராடினால் கங்கை முதலான அனைத்து புண்ணிய தீர்த்தங்களிலும் நீராடிய பலன் கிடைக்கிறது.

மகத்தான இம்மாசி மகத்தில் நீராடிப், பரம் பொருளைத் தரிசிக்கும் நற்பேறு பெறுதல் என்பது, மனிதப்பிறவி எடுத்ததன் பெரும்பயனை அடைவது போலாகும்.

உலகின் பல கோடியிலிருந்து மக்கள் திரள் திரளாக குடந்தையில் இப்புண்ணிய தினத்தில் கூடி, பெருவிழாவெடுத்து மகிழ்வார்கள். இவ்வரிய காட்சியைக் காண கண்கோடி போதாது.

## 'காரடையான்' நோன்பு

இந்நோன்பு மாசியும், பங்குனியும் சேரும் நாளில் செய்யும் நோன்பாகும்.

அதாவது மாசிமாதம் முடியும் நேரமும் பங்குனி மாதம் ஆரம்பமாகும் நேரமும் எப்போது சேர்ந்து வருகிறதோ, அந்த நேரத்தில் இரவு பகல் என்று எப்பொழுது ஆனாலும் அந்நேரத்தில் செய்து கொள்ளும் நோன்பாகும்.

இதைச் சாவித்திரி அம்மன் நோன்பு என்றும் சொல்கிறார்கள். சாவித்திரி ஆனவள் தன் கணவனான சத்தியவானின் உயிரை, யமனிடமிருந்து மீட்டு வந்ததால், இந்நாளை அப்படிக் கூறுவதும் உண்டு.

மேலும் சாவித்திரி, 'கௌரீ' அம்மனை வைத்துப் பூஜித்து, விரதம் இருந்து தன் மாங்கல்யத்தைக் காப்பாற்றிக் கொண்டாள். அப்படிப்பட்ட பத்தினியை தெய்வமாக்கிப் பூஜித்து, விரதம் இருந்து கொண்டாடி, நமக்கு மாங்கல்ய பிச்சை அருளவும், பெண்கள் தத்தம் கணவனைப் பிரியாமலும், புத்திர பௌத்திரர்களுடன், சகல சம்பத்துக்களையும் பெற்று சௌமங்கல்யத்துடன் வாழ வழிபடுவதே இந்நோன்பின் நோக்கமாகும்.

இந்நோன்பு தமிழ் பேசும் அந்தணர்கள் செய்து வரும் விரதமாகும். மேலும் இந்நோன்பு வழக்கமுள்ளவர்கள் தான் செய்து கொள்வதாக உள்ளது. ஆனால் இந்நோன்பின் மகியை வர்ணிப்பதற்கு வார்த்தைகள் இல்லை எனலாம்.

இந்நோன்பு செய்து கொள்பவர்களிடம் முன்னதாகவே நமக்குத் தேவையான சரடுகளைச் சொல்லி, பூஜையில் வைத்து அவர்கள் கட்டிக் கொள்ளும் போது, நாமும் அவர்களுடன் இருந்து, சரடு

# மத நல்லிணக்கம் உண்டாக மனநல்லிணக்கம் வரவேண்டும்

மதுரை ஆதீனம்



292 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் அருணகிரிநாத திருஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்

இவ்வுலகில் பல்வேறு சாதி அமைப்புகள், பல்வேறு சமயங்கள் இருந்தாலும் மக்கள் அனைவரும் ஆண்டவனுடைய குழந்தைகளே ஆவர். எனவே மக்கள் எல்லோரும் சகோதர சகோதரிகளே ஆவர்.

மக்களின் மனம் ஒருமித்த பிறகுதான் மதநல்லிணக்கம் ஏற்பட முடியும். எனவே சாதி, மத மோதல்கள் நீங்க முதலில் மக்களின் மனங்கள் இணைய வேண்டும். பிறகு மதங்கள் தானாக இணைந்து விடும்.

---

கட்டிக்கொண்டு பூ, அட்க்ஷதையுடன் அம்மனை வணங்கி, நமஸ் கரித்து, அவர்கள் செய்த பிரசாதத்தை வாங்கிச் சாப்பிட்டாலே, அதன் பலனை விவரிக்க இயலாது என்றால், விரத பலனை எப்படி வர்ணிப்பது என்றுதான் புரியவில்லை.

திருமணம் ஆக வேண்டிய கன்னிப் பெண்கள் இருந்தால் இச்சரடு வாங்கி அணிந்து, பிரசாதம் சாப்பிட, அடுத்த வருடத்திற்குள் திருமண மாவது என்பது நிச்சயமாகக் கூறலாம். எதிலும் ஒரு சிரத்தா பக்தி இருக்க, அதுவே எதையும் வெல்லும் என்பதாகும்.

இவ்விரதம் செய்வோர், காலைமுதல் நோன்பு செய்யும் நேரம் வரை ஸ்நானம் செய்து (மடி உடுத்தி) உலர்ந்த ஆடை உடுத்தி, யார்மேலும் படாமல் சுத்தமாக இருக்க வேண்டும். உணவு வகைகளை உண்ணாமல், காப்பி, உப்பில்லாத மோர் இவைகள் அருந்தலாம். தவிர்க்கமுடியாமல் வெளியில் செல்ல நேர்ந்தால், நோன்பின் சமயம் மறுபடியும் நீராடி, சுத்தமாக இருத்தல் மிக மிக அவசியமாகும்.

மேலும் நைவேதியத்திற்குச் செய்யும், காரடை, வெல்லடை இவைகளைச் சுத்தமாக செய்து, யாரும் தொடாமல் எடுத்து வைத்து, பூஜை நேரத்தில் எடுத்துக் கொள்ளலாம்.

பார்வதி பரமேஸ்வரர் படம் இருந்தால், அதற்கே பூஜை செய்யலாம். இல்லா விட்டால் மஞ்சளினால் பிள்ளையார் ஒன்றும், 'கௌரீ தேவி ஒன்றும் செய்து ஆவாஹனம் செய்து, ஷோட சோபசார பூஜைகள் செய்து, 'கௌரீ' அஷ்டோத்திரத்தால் பூஜித்தும் பூஜை செய்யலாம்.

நோன்புச் சரடுக்கு பூமுடியுடன் ஒன்பது முடிகள் போட்டு, அதை அந்தப் பூஜையில் வைக்க வேண்டும்.

ஒரு நுனி இலையில் காரடை, வெல்லடை வைத்து, (எலுமிச்சம்பழ அளவு) வெண்ணையை வைத்துக், கீழ் கண்டவாறு, மூன்று முறைச் சொல்லி நமஸ்கரிக்கவும்; பின் சரடு கட்டி கொள்ளவும்.

'உருகாத வெண்ணையும்  
உரு குலையாத  
ஓர் அடையும் நூற்றேன்  
(உனக்கு வைத்தேன்)  
ஓர் நாளும்  
என் கணவன்  
எனை விட்டகலாமை  
வரம் தருவாய்  
தேவியே........!!'

ஒருவருக்கு ஒரு இலை வீதம் எத்தனை பேர்கள் இருந்தாலும், அத்தனை பேர்களுக்கும் தனித்தனியாக வைத்து நிவேதிக்க வேண்டும்.

# குழந்தை பாக்கியம் பெறக் கைதொழுவீர் அன்னை கர்ப்பரட்சாம்பிகை

- ஆலய வெளியீடு

காலப்பழமையும் சாலப்பெருமையும் கொண்ட திருக்கருகாவூர் என்ற இத் திருத்தலத்தில் எல்லாம் வல்ல முன்னைப் பழம் பொருளாம் இறைவன், அருள்மிகு முல்லைவனநாதர் என்றும் பின்னைப் புதுமைக்கும் காரணக் காரிய கர்த்தாவாகிய இறைவி அருள்மிகு கருகாத்த நாயகி (ஸ்ரீ கர்ப்பரட்சாம்பிகை) என்றும் திருப்பெயர்கொண்டு வேண்டுவார்க்கு வேண்டும் நல்லன எல்லாம் நல்கி பேரருள் புரிந்து வருகிறார்கள்.

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசம் வட்டம் திருக்கருகாவூரில் காவிரி நதியின் கிளை நதியான வெட்டாற்றங்கரையில் இக்கோவில் அமைந்துள்ளது. தஞ்சாவூரிலிருந்து வடகிழக்கில் 20 கி.மீ. தொலைவிலும், கும்பகோணத்திலிருந்து தென்மேற்கில் 20 கி.மீ. தொலைவிலும் இத்திருக்கோயில் அமைந்துள்ளது.

## இத்திருக்கோயிலுக்கு வரும் வழி

மதுரை, திருச்சி, கோவை சேலம் பகுதிகளிலிருந்து வருகின்றவர்கள், தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் வந்து அங்கிருந்து டவுன் பஸ் மூலமாகவும் தஞ்சாவூரிலிருந்து மெலட்டூர்வழியாக கும்பகோணம் போகும் ரூட் பஸ் மூலமாகவும், திருக்கருகாவூர் வரலாம்.

சென்னை, நெய்வேலி, திருவாரூர் பகுதிகளிலிருந்து வருகின்றவர்கள் கும்பகோணம் பேருந்து நிலையம் வந்து அங்கிருந்து டவுன் பஸ் மூலமாகவும் கும்பகோணத்தில் இருந்து ஆவூர், மெலட்டூர் வழியாகத் தஞ்சாவூர் போகும் ரூட் பஸ் மூலமாகவும் திருக்கருகாவூர் வரலாம். திருக்கருகாவூர் கடைத்தெருவில் இருந்து சிறிது தூரத்தில் கோயில் உள்ளது.

இத்திருக்கோயிலானது கி.பி. 7-ஆம் நூற்றாண்டில் அவதரித்த திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் ஆகிய சைவ சமய குரவர்களால் தேவாரம் பாடல் பெற்ற அருஞ் சிறப்புடையது ஆகும். இத் திருக்கோயில் தமிழ்நாடு இந்துசமய அறநிலையத் துறையின் ஆட்சிக்குட்பட்டு இயங்கி வருகிறது.

## இக்கோயிலின் புராண மகிமைச் சுருக்கம்

முன்காலத்தில் முல்லைவனமாக விளங்கிய இத்தலத்தில் கௌதமர், கார்க்கேயர் என்ற இரண்டு முனிவர்கள் தவம்செய்து வந்தனர். நித்திருவர் என்பவரும் அவருடைய மனைவி வேதிகை என்பவரும் ஆசிரமத்தில் தங்கி தவம் செய்துவந்த முனிவர்களுக்குப் பணிவிடை செய்து வந்தனர். அவர்கள் தமக்குக் குழந்தை இல்லையே என்ற குறையை முனிவர்களிடம் கூற, முல்லைவனத்தில் எழுந்தருளியுள்ள இறைவனையும், இறைவியையும் வணங்கினால் வேண்டியது கிடைக்குமென்று உபதேசித்தனர். அவ்வாறே நித்திருவரும். வேதிகையும் முல்லைவனநாதரையும். இறைவியையும் வணங்கினர். அதனால் அவர்களுக்கு மனமகிழ்ந்த மகப்பேறு உண்டாயிற்று.

வேதிகை கருவுற்றிருந்தபோது கணவர் இல்லாமல் தனித்து இருந்த சமயம் கர்ப்ப அவஸ்தையால் சுயநினைவிழந்து மயக்கமுற்றிருந்தபோது ஊர்த்துவபாதர் என்ற முனிவர் வந்து பிச்சை கேட்க, மயக்கமுற்றிருந்தபடியால் வேதிகையால் முனிவருக்கு பிச்சையிட முடியவில்லை. அது அறியாத முனிவர் சாபமிட வேதிகையின் கரு கலைந்தது. அதனை அறிந்த அம்பாள் கர்ப்பரட்சகியாகத் தோன்றி சிதைந்த கருவைத் திரட்டி ஒரு கடத்துள் ஆவாகனம் செய்து குழந்தை உருவாகும் நாள் வரையிலும் வைத்துக் காப்பாற்றி நைந்துருவன் என்ற குழந்தையாகக் கொடுத்தருளினாள்.

இறைவியின் அருள் மகிமையைக் கண்டுணர்ந்த வேதிகை ''இனி இத்தலத்துள் கர்ப்பரட்சாம்பிகையாகவே எழுந்தருளி உலகில் கருவையும் தந்து; கருத்தரித்தவர்களையும், கருவையும் காப்பாற்ற வேண்டுமென்று'' பிரார்த்திக்க, அம்பாள் அவ்வாறே அருள்பாலித்தாள். அதுமுதற்கொண்டு இத்தலத்திற்கு திருக்கருகாவூர் என்றும் அம்பாளுக்கு ஸ்ரீ கர்ப்பரட்சாம்பிகை என்றும் பெயர் வழங்கி வரலாயிற்று. குழந்தை நைந்துருவனுக்கு தாய்ப்பால் இல்லாதபடியால் அம்பாள் காமதேனுவை அனுப்பிப் பால் கொடுக்கச் செய்தாள். காமதேனு தன் கால் குளம்பினால் கீறவும் பால்குளம் தோன்றியது. அது ஆலயத்திற்கு முன்புறம் க்ஷீரகுண்டம் என்ற பெயரில்



பேரறிஞர் அண்ணா நினைவு நாளில் திருவேற்காடு அருள்மிகு தேவி கருமாரியம்மன் ஆலயத்தில் சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து விழா மிகச்சிறப்புற நடைபெற்றது. இவ்விழாவில் மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் க. சுந்தரம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள் தேவி உபாசகர் தவத்திரு சுவாமி இராமதாசர், திருக்கோயில் நிர்வாக அதிகாரி மற்றும் இணை ஆணையாளர் திரு இரா. சுப்பிரமணியன், பி.ஏ பி.எல்., அறங்காவலர் குழுத்தலைவர் டெக்கான் மூர்த்தி மற்றும் அறங்காவலர் பெருமக்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

---

இன்றளவும் இருந்து வருகின்றது. எனவேதான் இத் தலத்து நாயகியை நினைந்து வணங்கினால் கரு உண்டாகிறது. கரு நிலைக்கிறது, சுகப்பிரசவம் ஏற் படுகின்றது. கருவைக் கொடுப்பதும், காப்பதும், நல்ல குழந்தையை உருவாக்கி உலகுக்கு அளிப்பதும், அருள்மிகு கர்ப்பரட்சாம்பிகையின் பேரருள் திற னாகும்.

இங்கு எழுந்தருளியுள்ள அருள்மிகு முல்லை வனநாதர் சுயம்புலிங்கமாகும். லிங்கம் புற்று மண்ணி னால் ஆகியதாகும். எனவே சுவாமிக்கு நேரடியாக அபிஷேகம் செய்வது இல்லை. சுவாமியின் திரு மேனியில் ''புனுகுச் சட்டம்'' மட்டுமே சாற்றப் படுகின்றது. லிங்கத் திருமேனியில் முல்லைக் கொடி படர்ந்து இருந்த வடுவை இன்றும் காண லாம். தீராத நோயுடையவர்கள் சுவாமிக்கு புனு குச் சட்டம் சாற்றித் தம் நோய் நீங்கப்பெற்று வரு கிறார்கள். இது இன்றளவும் நடைபெற்றுவரும் கண்கூடான உண்மையாகும்.

''புனுகுச் சட்டம்'' என்பது ஆண் புனுகுப் பூனைக் காயை தேங்காய் நார்த்தியில் முறையாகச் சுட்டுப் பிழிந்து எடுப்பதனால் கிடைக்கும் ஒரு கெட்டியான மணமிக்க மருத்துவகுணம் கொண்ட அடர்த்தியுள்ள எண்ணெய்போன்ற திரவமாகும்.

கீழ்க்கண்ட விபரப்படி நிர்வாக அதிகாரிக்கு M.O / D.D / Postal Order மூலம் பணம் அனுப்பி அச்சு ரசீதையும், அனுக்ரகித்த மகாபிரசாதத்தையும் தபால் மூலம் பெற்று பயனடையலாம்.

**தபால் மூலம் பிரசாதம் பெறக் கட்டணம் விபரம்**

| | | |
|---|---|---|
| 1. | அஷ்டோத்திரம் அர்ச்சனை | ரூ. 10.00 |
| 2. | சகஸ்ரநாமம் அர்ச்சனை | ரூ. 50.00 |
| 3. | அபிஷேகம் | ரூ. 100.00 |
| 4. | விளக்கெண்ணெய் மந்திரித்தல் | ரூ. 50.00 |
| 5. | நெய் மந்திரித்தல் | ரூ. 50.00 |
| 6. | பிரசாதம் அனுப்புதல் | ரூ. 25.00 |

திருமணம் கூடிவராமல் தடைப்பட்டு வரு கின்றவர்களும் திருமணமாகிப் பல்லாண்டுகள் ஆகி யும் குழந்தைப்பேறு இல்லாதவர்களும் இங்கு எழுந்தருளியுள்ள ஸ்ரீ கர்ப்பரட்சாம்பிகைக்குப் பிரார்த் தனை செய்துகொண்டால் விரைவில் திருமணம் கூடிவரும். குழந்தை இல்லாதவர்களுக்கு மகப்பேறு உண்டாகும். கர்ப்பமடைந்தவர்கள் பிரார்த்தனை செய்துகொண்டால் கர்ப்பகால ஆபத்துகள், பேறு காலக் கோளாறுகள் நீங்கப்பெற்று சுகப்பிரசவம் உண்டாகும்.

**திருமணம் கூடிவரப் படிக்கு நெய் மெழுகுதல்:**

திருமணம் கூடிவராத கன்னியர்களும், பல ஆண்டுகளாகக் குழந்தையில்லாத பெண்களும் இக் கோயிலுக்கு நேரில் வந்து ஸ்ரீ அம்பாள் சந்நிதிப் படியை சிறிது நெய்யால் மெழுகிக் கோலமிட்டு அர்ச்சனை செய்து வழிபட வேண்டும். இவ்வாறு செய் தால் விரைவில் திருமணம் நடைபெறும். குழந்தை இல்லாதவர்களுக்கு மகப்பேறு உண்டாகும்.

## குழந்தை பாக்கியம் பெற நெய் மந்திரித்தல்

திருமணமாகிப் பல ஆண்டுகள் ஆகியும் குழந்தையில்லாதவர்களுக்கு ஸ்ரீ கர்ப்பரட்சாம்பிகையின் திருப்பாதத்தில் வைத்து மந்திரித்துக் கொடுக்கப்படும் நெய்யைத் தம்பதியினர் 48 நாட்கள் தொடர்ந்து இரவில் சிறிதளவு சாப்பிட்டுவர விரைவில் கருத்தரிக்கும். நேரில் வர இயலாத வெளியூர் அன்பர்கள் ரூ. 50/-ஐ M.O / D.D / Postal Order மூலம் நிர்வாக அதிகாரிக்கு அனுப்பி மந்திரித்த நெய்யை தபால் பார்சல் மூலம் பெற்று பயன்பெறலாம்.

## சுகப்பிரசவம் ஏற்பட விளக்கெண்ணை மந்திரித்தல்

கர்ப்பம் அடைந்த பெண்கள் சுகப்பிரசவம் அடைவதற்காக இத்திருக்கோயிலில் ஸ்ரீ கர்ப்பரட்சாம்பிகை திருப்பாதத்தில் விளக்கெண்ணை வைத்து மந்திரித்து கொடுக்கப்படுகிறது. இது விசேஷமானதாகும். இந்த விளக்கெண்ணையைப் பிரசவ வலி ஏற்படும்போது வயிற்றில் தடவினால் எந்தவிதமான கோளாறுகளோ, பேறுகால ஆபத்துகளோ, பின் விளைவுகளோ இல்லாமல் சுகப்பிரசவம் ஆகும். வெளியூர் அன்பர்கள் ரூ. 50/-ஐ M.O / D.D / Postal Order மூலம் நிர்வாக அதிகாரிக்கு அனுப்பி மந்திரித்த விளக்கெண்ணையைத் தபால் மூலம் பெற்று பயன் அடையலாம். கர்ப்பமுற்ற பெண்கள் பிரசவத்துக்கு சில மாதங்களுக்கு முன்னரே M.O / D.D / Postal Order அனுப்பி மந்திரித்த விளக்கெண்ணை பெற்றுக் கொள்வது நல்லது. கடைசிநேரத்தில் பணம் அனுப்புவதைத் தவிர்க்க வேண்டுகிறோம்.

நெய், விளக்கெண்ணை திருக்கோயில் அலுவலகத்தில் கொடுக்கப்படும். சுவாமிக்கு ''புனுகுச் சட்டம்'' சாற்ற விரும்புகிறவர்கள் அதனைத் தாங்களே வாங்கி வருதல் வேண்டும். அல்லது நேரிடைக் கண்காணிப்பில் வடித்தெடுக்கப்படும் தூய்மையான ''புனுகுச் சட்டம்'' - கிடைக்க ஏற்பாடு செய்து தரப்படும்.


M.O / D.D / Postal Order அனுப்புபவர்கள் M.O / D.D / Postal Order கூப்பனில் (1) பெண் பெயர் / நட்சத்திரம் / என்ன பிரார்த்தனைக்குப் பணம் அனுப்பப்பட்டுள்ளது என்ற விபரம் அதாவது ''குழந்தை உண்டாவதற்கு மந்திரித்த நெய்பிரசாதம்'' அல்லது ''சுகப்பிரசவம் ஏற்பட மந்திரித்த விளக்கெண்ணை பிரசாதம்'' - என்ற குறிப்பு மற்றும் சரியான, தெளிவாகப் புரியும்படி அஞ்சல் முகவரி (Capital Letters) எழுதவேண்டும். M.O. கூப்பனில் 'தகவலுக்கான இடத்தில்' (Space for Communication) முகவரி அவசியம் எழுதவேண்டும்.

''துலாபாரம் பிரார்த்தனை'' இங்கு நடைமுறையில் இருந்து வருகின்றது. துலாபாரம் கொடுக்க விரும்புகின்றவர்கள் அதற்குரிய பொருளைக் கொண்டுவரவேண்டும். இங்குப் பிரார்த்தனை செய்து கொண்டு பிறந்த குழந்தைகளுக்கு ''முதன் முதலில் சாதம் ஊட்டுதல்'' பிரார்த்தனையை ஆலயத்தில் செய்து கொள்ளலாம்.

அபிஷேகம் நேரில் செய்ய விரும்புகின்றவர்கள் மஞ்சள் பொடி, திரவியப் பொடி, மாப்பொடி, பன்னீர், செயற்கை வாசனை கலக்காத அரைத்த சந்தனம், தேன், சர்க்கரை, அபிஷேகம் மற்றும் தீபத்துக்கு நல்ல எண்ணை, பால், தயிர், இளநீர், திரிநூல், புஷ்பம் (மாலைகள், சரம் விருப்பத்திற்கும் வசதி வாய்ப்புக்கும் ஏற்றவாறு) பஞ்சாமிர்தம் செய்வதற்கு வாழைப்பழங்கள், தேன், சர்க்கரை, கற்கண்டு, திராட்சை, பேரீட்சை, சர்க்கரைப் பொங்கல் நிவேத்தியத்திற்கு தேவையான பொருள்களும் கொண்டு வரவேண்டும். அல்லது வாங்கிக் கொடுக்க வேண்டும். புடவை முதலியன அம்பாளுக்குச் சாற்ற விரும்புகின்றவர்கள் எந்த நாளிலும் சாற்றிக் கொள்ளலாம். அபிஷேகம் செய்ய விரும்புகின்றவர்கள் எல்லா நாளிலும் காலை 9.30 மணி அல்லது மாலை 4.30 மணியளவில் அலுவலகத்தில் வந்து தெரிவித்தால் தக்க ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். நிர்வாக அதிகாரிக்கு முன்னரே கடிதம் எழுதினால் தாங்கள் விரும்பும் அளவிற்கான பால், தயிர், இளநீர் இதர பொருட்கள் ஏற்பாடு செய்து கொடுக்கப்படும். இதற்கு முன்பணம் ஏதும் அனுப்ப தேவையில்லை. அபிஷேகதாரர்கள் நேரிடையாக பணம் பட்டுவாடா செய்துவிடலாம்.

## மந்திரித்த நெய் உபயோகிக்கும் முறை

குழந்தை இல்லாதவர்களுக்கு மகப்பேறு உண்டாவதற்காக அம்பாள் பாதத்தில் வைத்து மந்திரித்து அனுப்பப்படும் நெய்ப் பிரசாதத்துடன் 1/4 கிலோ சுத்தமான நெய் கலந்து வைத்துக் கொண்டு இரவுப்படுக்கைக்குச் செல்லும்போது சிறிதளவு எடுத்து தம்பதியினர் அருள்மிகு கர்ப்பரட்சாம்பிகையை மனத்தால் நினைந்து வணங்கி 48 நாட்கள் சாப்பிட்டு வர வேண்டும். கணவரால் தினம் நெய் சாப்பிட இயலாவிட்டாலும் மனைவி தினமும் நெய் சாப்பிட்டு வரவும். நெய் சாப்பிடுங் காலங்களில் உணவில், இதரபழக்கவழக்கங்களில் பத்தியங்களோ, கட்டுப்பாடுகளோ இல்லை. இதர மருந்து சாப்பிடுகின்றவர்கள் அதனையும் தொடரலாம். அதிகமாக நெய் இருந்தால் அதிக நாட்கள் சாப்பிடலாம். ஒருவருக்கு மந்திரித்த நெய்யை மற்றவர்கள் சாப்பிட வேண்டாம். மாதவிலக்கு காலங்களில் 5 நாட்கள்



*திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்த சாரதி சுவாமி ஆலயத்தில் 3.2.99 அன்று பேரறிஞர் அண்ணா நினைவு சிறப்பு வழிபாடு மற்றும் பொதுவிருந்து விழா மிகச்சிறப்பாக நடைபெற்றது. முன்னாள் மத்திய அமைச்சரும், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான திருமிகு டி.ஆர். பாலு அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். ஆலய நிர்வாக அதிகாரியும் உதவி ஆணையாளருமான திரு பி. வாசுநாதன், எம்.ஏ. பி.எல்., அவர்கள் விழா ஏற்பாடு களைச்சிறப்புறச் செய்து இருந்தார்கள்.*

---

சாப்பிட வேண்டாம். இவ்வாறு செய்தால் ஸ்ரீ கர்ப்ப ரட்சாம்பிகையருளால் விரைவில் மகப்பேறு உண்டாகும்.

மாதவிடாய்க் கோளாறு உள்ள பெண்கள், கர்ப்பப்பை சம்பந்தமான நோயுள்ள பெண்கள், திருமணம் தடைபடும் பெண்கள் ஆகியோரும் மந்திரித்த நெய் பெற்றுச் சாப்பிட்டு பயன்பெறலாம்.

### மந்திரித்த விளக்கெண்ணை உபயோகிக்கும் முறை

அருள்மிகு கர்ப்பரட்சாம்பிகையின் திருப் பாதங்களில் வைத்து மந்திரித்து தபால் பார்சல் மூலம் அனுப்பப்படும் விளக்கெண்ணையை பிரசவ வலி ஏற்படும் சமயத்தில் வயிற்றில் தடவினால் சுகப் பிரசவம் உண்டாகும். கர்ப்பமடைந்தவர்களுக்கு எப் போதாவது அசாதாரணமான வலிதோன்றினால் அப் போது மந்திரித்த விளக்கெண்ணையை வயிற்றில் தடவினால் வலி நின்று நிவாரணம் கிடைக்கும்.

அமைதியும், தொன்மையும், அருளும் நிரம் பப் பெற்ற இத்திருக்கோயிலுக்கு ஒரு முறை வந்து தரிசனம் செய்து நல்லன எல்லாம் பெற வேண்டு கிறோம்.

கருவுக்கு உயிர்கொடுக்கும் அன்னை கருகாத்த நாயகியும், உருவான உயிர்க்கு நோயுற்றபோது தீர்த் தருளும் நாயகன் முல்லைவன நாதரும் என்றும் உங்களுக்கு தோன்றாத் துணையாகயிருந்து அருள் புரிவார்களாக.

இத்திருக்கோயில் நடை காலை 6.30 மணி முதல் மதியம் 12.30 மணி வரையிலும், மாலை 4 மணி முதல் இரவு 8.00 மணி வரையிலும் வழிபாட்டிற்காக திறக்கப்பட்டிருக்கும்.

கோவிலுக்கு பணம் M.O / D.D / Postal Order மற்றும் கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

**நிர்வாக அதிகாரி**
அருள்மிகு முல்லைவனநாதர் திருக்கோயில்
(அருள்மிகு கர்ப்பரட்சாம்பிகை சந்நிதி)
திருக்கருகாவூர் P.O. Pin : 614302
பாபநாசம் [TK], தஞ்சாவூர் [Dist]

D.D Union Bank of India, Thirukarugavur, அல்லது State Bank of India, Papanasam. என்ற முகவரியில் மாற்றிக்கொள்ளத்தக்க வகையில் அனுப்ப வேண்டு கிறோம்.

'கமுத முல்லை கமழ்கின்ற கருகாவூர்
அமுதர் வண்ணம் அமுலும் அழல்வண்ணமே'

- திருஞானசம்பந்தர்

'கருவாய் உலகுக்கு முன்னே தோன்றி
கண்ணாம்கருகாவூர் எந்தை தானே'

- திருநாவுக்கரசர்.

★★★

# திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயில்

- ஆலய வெளியீடு

## திருக்கோயில் பற்றிய முக்கிய குறிப்புகள்

### இருப்பிடம்

தமிழகத்தின் தலைநகராம், சென்னை மாநகரில் சென்ட்ரல் ரயில் நிலையம் மற்றும் எழும்பூர் ரயில் நிலையத்திற்கு தென்கிழக்கே சுமார் 4 கி.மீ. தொலைவில் மெரினா கடற்கரை அருகில் அமைந்துள்ளது.

### கருவறையில் மூலவர் திருக்கோலமும் திருநாமமும்

பெருமாள்மூலவர் பார்த்தசாரதி வலது கையில் (சங்கு) பாஞ்சசன்யம் ஏந்தி (சக்கரம் இன்றி) இடது கை திருவடியை காட்டுகின்ற முத்திரையோடு கிழக்கு முகமாக நின்ற திருக்கோலம்.

கருவறையில் அவருடன் தேவியார் ருக்மிணி, அண்ணாபலராமர், தம்பிசாத்யகி, பிள்ளை பிரத்யும்னர், பேரன் அநிருத்தன் ஆகியோர் எழுந்தருளி அருள்மிகு வேங்கட கிருஷ்ணன் என்ற திருநாமம் தாங்கி மூலவர் பெருமாள் தமது குடும்பத்தாருடன் ருக்மிணித்தாயார் சமேதராய் எழுந்தருளியுள்ளது அவசியம் அனைவரும் தரிசிக்க வேண்டிய அரிய திருக்கோலம்.

தருமத்தை நிலைநாட்ட வேண்டி நிகழ்ந்த மஹாபாரதப்போரில் பீஷ்மர் எய்த அம்புகளைப் பார்த்தனுக்குத் தேரோட்டியாக நின்று தாமே தாங்கியதால், ஏற்பட்ட வடுக்களை உற்சவர் திருமுகத்தில் இன்றும் தரிசிக்கலாம். இந்த ஐதீகத்தின் அடிப்படையில் பெருமாள் ஸ்ரீபார்த்தசாரதி என்றழைக்கப்படுகிறார். ஆலயமும் அப்பெயரில் அழைக்கப்படுகிறது.

### தனிக்கோயில் தாயார்

ஸ்ரீ வேதவல்லித்தாயார்: இவரைத் திருக்கல்யாணம் செய்து கொள்வதற்காக ஸ்ரீரங்கநாதர் இத்தலத்திற்கு எழுந்தருளினார் என்பது ஐதீகம்.

### ஐந்து பெருமாள் திருத்தலம்

ஸ்ரீரங்கம், திருப்பதி, காஞ்சிபுரம், அகோபிலம், அயோத்தி ஆகிய ஐந்து திவ்ய தேசத்து பெருமான்களை இங்கு ஒரே திருக்கோயிலில் சேவிக்கலாம். ஐவரும் தனித்தனி சன்னதிகளில் எழுந்தருளியுள்ளது சிறப்பு. ஐவருக்கும் தனித்தனியே பற்பல உற்சவமும் உண்டு. எனவே, ஆண்டு முழுவதும் இத்திருக்கோயிலில் உற்சவம் தான்.

### ஆழ்வார்கள் மங்களாசாசனம்

பேயாழ்வார், திருமழிசை ஆழ்வார், திருமங்கையாழ்வார் ஆகியோர் மங்களாசாசனம் செய்து அருளிய சிறப்புப் பாசுரங்களால் 108 திருப்பதிகளுள் முக்கியத்தலம் இது.

### பாடல் பாடிய மற்றவர்கள்

தியாகபிரும்மம் முத்துஸ்வாமி தீக்ஷிதர், சுப்பிரமணிய பாரதியார் ஆகியோர் பாடியுள்ளனர். குறிப்பாக பாரதியார் பாடிய கண்ணன் பாடல்கள் அனைத்தும் இப்பெருமாளைப் பற்றியது எனக் குறிப்பிடுவர்.

### பிரத்தியக்ஷம் : (காட்சியளித்தது)

| | | |
|---|---|---|
| சுமதி சோழராஜன் | - | பார்த்தசாரதி |
| அத்திரி முனிவர் | - | நரசிம்மன் |
| மதுமான் | - | ராமர் தன் தம்பிகளுடன் |
| ஸப்தரோமா | - | கஜேந்திர வரதராஜர் |
| ப்ருகுபுத்ரி | - | வேதவல்லித் தாயார் |

### எழுந்தருளல்

ஆத்ரேய முனிவரால் வைகானஸ ஆகம முறைப்படி பிரதிஷ்டை.

## விமானம்

ஆனந்த நிலைய விமானம்
**க்ஷேத்திரம் :** *(புராணப் பெயர்)*

பிரஹ்மாண்ட புராணப்படி பிருந்தாரண்ய க்ஷேத்திரம் (துளஸீவனம்)

## (திருக்குளம்) புஷ்கரணி

கைரவிணீ புஷ்கரணி (இந்த்ர, ஸோம, மீன, அக்னி, விஷ்ணு) ஐந்து தீர்த்தங்களைக் கொண்டது. திருக்கோயிலின் எதிரே அமைந்துள்ளது.

## வரையறை

நைவேத்தியத்திற்குக் கடலை எண்ணெய், மிளகாய் சேர்ப்பதில்லை.

## சம்பிரதாயம்

தென்கலை ஸ்ரீ வைஷ்ணவம்

## பூஜைமுறை

ஸ்ரீ வைகானஸ ஆகமம்

## நிர்வாகம்

தமிழ்நாடு இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின் நிர்வாகத்தில் உதவி ஆணையரைச் செயல் அலுவலராகக் கொண்ட திருக்கோயில்.

## பூஜா காலம்

## ஆறு கால பூஜை

## பூஜை கால விபரம்

காலை மணி 5.50க்கு திருமஞ்சனக் குடம் வருதல்
காலை மணி 5.55க்கு சுப்ரபாதம்
காலை மணி 6.00க்கு விஸ்வரூபம்
காலை மணி 6.15க்கு திருவாராதனம்
காலை மணி 8.00க்கு காலசந்தி தீர்த்தம்
காலைமணி 11.00க்கு உச்சிக்கால பூஜை
காலை மணி 12.00க்கு திருக்காப்பு சேர்த்தல்
மாலை மணி 4.00க்கு திருக்காப்பு நீக்குதல்
மாலை மணி 6.00க்கு நித்யானு சந்தானம்
மாலை மணி 7.30க்கு திருவாராதனம்
(இராக்கால பூஜை)
இரவு மணி 9.00க்கு அர்த்த ஜாமம். (சனிக்கிழமைகள் மற்றும் விசேஷ உற்சவ நாட்கள் தவிர மற்ற சாதாரண நாட்களில் மட்டும்)

நிர்வாக சூழ்நிலைக்கு ஏற்ப இக்காலங்களில் மாறுதல் ஏற்படலாம்.

## திருவல்லிக்கேணி அருள்மிகு பார்த்தசாரதி சுவாமித் திருக்கோயில் - தல வரலாற்றுச் சுருக்கம்

தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகரத்தின் நடுநாயகமாக அமைந்துள்ளது திருவல்லிக்கேணி எனும் திவ்வியதேசம். கடற்கரையை ஒட்டி அமைந்துள்ள இத்தலத்தை, பேயாழ்வார், திருமழிசையாழ்வார், திருமங்கை ஆழ்வார் ஆகிய மூவர் மங்களாசாஸநம் செய்துள்ளனர்.

இத்தலத்திலுள்ள திருக்குளமானது அல்லி மலர்கள் நிறைந்து காணப்பட்டதால் அல்லிக்கேணி (கேணி = குளம்) என்று பெயர் பெற்றது. அப்பெயரே ஊருக்கு நிலைத்து விட்டது. இதைத் தவிர கைரவிணி, பிருந்தாவனம், துளசிவனம் என்ற பல பெயர்களும் உண்டு.

முதலாழ்வார்கள் மூவரும், திருமழிசைப் பிரானும் இத்தலத்தில் பல்லாண்டுகள் எழுந்தருளியிருந்து தவம் செய்ததாக குருபரம்பரை வரலாறுகள் பகர்கின்றன. ஸ்ரீராமானுஜர், மணவாளமாமுனிகள், வேதாந்தாசாரியார் ஆகியோர் இத்தலத்திற்கு வந்து எம்பெருமானுடைய அருளைப் பெற்றிருக்கின்றனர்.

தேசியகவி பாரதியார் இத்தலத்திலேயே வாழ்ந்திருந்து அனுதினமும் ஸ்ரீ பார்த்தசாரதி எம்



ஸ்ரீ பார்த்தசாரதி சுவாமி உற்சவர்

பெருமானை வழிபட்டிருக்கிறார். அவர் பாடியுள்ள கண்ணன் பாடல்கள் அனைத்தும், ஸ்ரீபார்த்தஸாரதி எம்பெருமானைக் கருத்தில் கொண்டே என்று கூறுவர். கணிதமேதை ராமானுஜம், அரசியல் மேதை சத்திய மூர்த்தி ஆகியோரும் இத்தலத்தில் வாழ்ந்தவர்களே.

சுமதி என்னும் அரசன் திருமலை (திருப்பதி) யில் எழுந்தருளியிருக்கும் வேங்கடவனிடம் மிகுந்த பக்தியுள்ளவன். அவன் ஒருமுறை வேங்கடவனைக் கிருஷ்ணனாகவே சேவிக்க வேண்டும் என்று விரும்பி னான். அவனுக்காகவே வேங்கடவன் கிருஷ்ணனாக இத்தலத்தில் சேவை சாதித்ததாக தல புராணம் கூறுகிறது. எனவே இத்தலத்தில எழுந்தருளியுள்ள மூலவருக்கு வேங்கடகிருஷ்ணன் என்றே திருநாமம் வழங்கப்படுகிறது. பாரதப்போரில் அர்ச்சுனனுக்கு ஸாரதியாக இருந்த திருக்கோலத்தில் எழுந்தருளி யிருக்கின்ற எம்பெருமான், ஆயுதம் எதையும் எடுப்ப தில்லை என்று செய்த சபதத்திற்கேற்ப ஒரு திருக் கரத்தில் சங்கு மட்டும் ஏந்தி (சக்கராயுதம் இல்லா மல்) எழுந்தருளியிருக்கிறார். மேலும் ஸாரதிக்கே உரிய மீசையுடன் எம்பெருமான் எழுந்தருளியிருப் பது இத்தலத்தில் மட்டுமேயுள்ள சிறப்பாகும். தனது மனைவியான ருக்மிணிப் பிராட்டி, தமையன் பலராமன், தம்பி ஸாத்யகி, பிள்ளை பிரத்யும்னன், பேரன் அனிருத்தன் ஆகியோருடன் குடும்ப ஸமேத ராக எழுந்தருளியுள்ளான். பாரதப்போரில் அர்ச்சு னன் மீது பீஷ்மர் தொடுத்த அம்புகளையெல் லாம் தானே முன்னின்று ஏற்றுக் கொண்டு அர்ச்சுன னுக்கு வெற்றியைத் தேடிக் கொடுத்ததை விளக்கும் வகையில் இன்றும் உற்சவர் ஸ்ரீபார்த்தஸாரதி முகத் தில் அம்பு பட்ட வடுக்களுடன் எழுந்தருளியிருப் பதைக் காணலாம்.

ஸ்ரீபார்த்தஸாரதியைத் தவிர ஸ்ரீமந்நாதன், ஸ்ரீநரஸிம்மன், ஸ்ரீராமன், ஸ்ரீகஜேந்திர வரதன் ஆகி யோரும் தனித்தனி சன்னிதிகளில் எழுந்தருளி யுள்ளனர். ஸ்ரீமந்நாதனின் தனிக்கோயில் நாச்சியாரான வேதவல்லித் தாயாருக்கும், ஆண்டாளுக்கும் தனித் தனி சன்னதிகள் உள்ளன.

கி.பி. 808-ம் வருடம் பல்லவ மன்னன் நந்தி வர்மன் என்பவன் இத்திருக்கோயிலுக்கு மானியம் வழங்கியதைக் குறிப்பிடும் கல்வெட்டொன்று இக் கோயிலில் உள்ளது. இதன் மூலம் இத்திருக்கோயில் ஆயிரம் வருடங்களுக்கு முன்பே மிகவும் பிரசித்தி பெற்று விளங்கியது என்பதை அறியலாம். சோழர்கால கல்வெட்டுக்களும், விசயநகர மன்னர்களின் கல் வெட்டுக்களும் இத்திருத்தலத்தில் உள்ளன.



**ஸ்ரீ வேதவல்லித் தாயார்**

ஸ்ரீராமானுஜரின் திருத்தகப்பனாரான ஆசூரி கேசவாசாரியர் இத்தலத்திற்கு வந்து யாகம் செய்து, ஸ்ரீபார்த்தஸாரதியின் அருளாலேயே ஸ்ரீராமானுஜ ரைப் புத்திரராக அடைந்தார்.

வருடம் முழுவதும் இத்தலத்தில் உற்சவங் கள் மிகச்சிறப்பாக நடைபெற்று வருகின்றன. சித் திரை மாதம் ஸ்ரீ பார்த்தஸாரதிக்கும், ஆனிமாதம் ஸ்ரீநரஸிம்மருக்கும் பிரம்மோத்ஸவங்கள் நடைபெறு கின்றன. இரண்டு எம்பெருமான்களுக்கும் தனித்தனி துவஜஸ்தம்பங்கள் அமைந்துள்ளது இத்தலத்திற்கு மட்டுமே உள்ள தனிச் சிறப்பாகும். சித்திரை மாதம் வஸந்தோத்ஸவம், ஆனி மாதம் கோடை உத்ஸவம், ஆவணி மாதம் பவித்ரோத்ஸவம், மார்கழி மாதம் அத்யயன உத்ஸவம், மாசி மாதம் தெப்போத்ஸவம், தவனோத்ஸவம் முதலிய உத்ஸவங்கள் மிகச் சிறப் பாக நடைபெற்று வருகின்றன. வைகாசி மாதம் ஸ்ரீகஜேந்திர வரதருக்கும், பங்குனி மாதம் ஸ்ரீரங்க நாதர், ஸ்ரீராமர் ஆகியோருக்கும், ஆடி மாதம் ஆண்டா ளுக்கும், புரட்டாசி மாதம் வேதவல்லித் தாயாருக் கும் உத்ஸவங்கள் நடைபெறுகின்றன. சித்திரை மாதம் ஸ்ரீராமானுஜருக்கும் ஐப்பசி மாதம் ஸ்ரீ மணவாள மாமுனிகளுக்கும் பத்து நாட்கள் உத்ஸவங்கள் மிக விமரிசையாக நடைபெறுகின்றன. மணவாளமாமுனி கள் சாற்று முறையன்று ஸ்ரீபார்த்தஸாரதிப் பெரு மாள் கைத்தலத்திலேயே எழுந்தருளி மணவாள மாமுனிகளுக்கு ஸேவை ஸாதிப்பது கண்கொள் ளாக் காட்சியாகும்.

மார்கழி மாதம் நடைபெறும் வைகுண்ட ஏகாதசிப் பெருவிழா ஒரு தமிழ்த் திருவிழா. இத் திருவிழாவில் அருள்மிகு பார்த்தசாரதி உற்சவர் முன் பாக ஆழ்வார்கள் வீற்றிருக்க தமிழ் வேதம் எனப் போற்றப்படும் நாலாயிர திவ்யப்பிரபந்தப் பாடல் களை 21 நாட்கள் தென்னாசார்ய ஸம்பிரதாயத்தின் படி சேவை செய்யப்படுகிறது.

இத்திருக்கோயிலின் பூஜை முறைகள் ஸ்ரீ வைகானஸ ஆகமப்படியும், தென்கலை ஸ்ரீவைஷ் ணவ ஸம்ப்ரதாய ஆசாரப்படியும் நடைபெறு கின்றன.

திருமஞ்சனம் : (பிரார்த்தனை வேண்டுதல் களாக சேவார்த்திகளால் நிறைவேற்றப்படுபவை)

1. திங்கட்கிழமை, வெள்ளிக்கிழமைகளில் பார்த்த சாரதி மூலவருக்கும்

2. புதன், சனிக்கிழமைகளில் நரசிம்மருக்கும்

3. வெள்ளிக்கிழமைகளில் தாயார் மற்றும் இதர பெருமாள்களுக்கும் திருமஞ்சனம் செய்விக்கப் பட்டு வருகிறது.

## சிறப்பு சேவை / சமர்ப்பணங்கள்

வைகுண்ட ஏகாதசி மற்றும் ஸ்ரீமணவாள மாமுனிகள் சாற்றுமுறையன்று - மூலவர் பார்த்தசாரதி முத்தங்கி சேவை.

> **அருட்சோதியைக் காணலாம்**
>
> சாதிசமயச்
> சழக்கை விட்டேன்
>
> **- அருட்**
>
> சோதியைக் கண்டேன் அடி
>
> **- அக்கச்சி**
>
> அருட்சோதியைக்
> கண்டேனடி
>
> **- அருட்பிரகாச வள்ளலார்**

வைகுண்ட ஏகாதசி மற்றும் ஸ்ரீமணவாள மாமுனிகள் சாற்றுமுறையன்று - மூலவர் பார்த்தசாரதி முத்தங்கி சேவை.

ஸ்ரீமணவாளமாமுனிகள் சாற்றுமுறை அன்று பார்த்தசாரதி உற்சவருக்கு கைத்தல சேவை நடைபெறு கிறது.

இத்தலத்தில் உள்ள ஐந்து பெருமாள்களுக்கும் கருட சேவைகள் நடைபெறுகிறது. இவற்றுள் ஸ்ரீரங்க நாதருக்கு பங்குனி உத்திரத்தன்று கண்ணாடி கருட சேவை நடைபெறுகிறது.

மாசிமகத்தன்று பார்த்தசாரதிப் பெருமாள் கருட சேவையில் சமுத்திரக் கரைக்குச் சென்று சக்கரத் தாழ்வாருக்கு திருமஞ்சனம் நடைபெற்று, தீர்த்தவாரி நடைபெறுகிறது.

தைமாதத்தில் பார்த்தசாரதிக்கு லட்சார்ச்சனை யும், புரட்டாசி மாதத்தில் ஸ்ரீ வேதவல்லித் தாயா ருக்கு லட்சார்ச்சனையும் நடைபெறுகிறது.

## நரசிம்ம சுவாமி சன்னிதி

இச்சன்னதி அ/மி. பார்த்தசாரதி ஸ்வாமி சன்னதியின் பின்புறம் மேற்கு நோக்கி அமைந் துள்ளது. பிரார்த்தனைகளை நிறைவேற்றும் பெரு மாள் அ/மி. நரசிம்மர் எழுந்தருளியுள்ள முக்கிய சன்னிதி. மிகவும் புராதனமானது என்று கருதப்படும். இச்சன்னிதியில் பிரதட்சணம் (திருவலம் வருதல்) செய்தும் பலவாறும் பக்தர்கள் மத்தியில் பிரார்த்தனை களைக் கொண்டு பெருமை பெற்று விட்ட பெரு மாள் அ/மி. நரசிம்மப் பெருமாள், மூலவர் யோக நரசிம்மராகவும், உற்சவர் இரு தேவியருடன் கனிவும் அருளும் காட்டுகின்ற அபய, ஆஹ்வான (அழைக்கும்) முத்திரையுடன் எழுந்தருளியுள்ளார். அ/மி. நரசிம்மர் பிரம்மோற்சவத்தில் 5ம் நாள் உற்சவரும், மூலவரைப் போல் யோக நரசிம்மராக திருக்கோலம் தாங்கி தரிச னம் தருகிறார் அப்பொழுது மூலவருக்கு முத்தங்கி சமர்ப்பிக்கப்படும். எட்டாம் திருநாள் காலை பல் லக்குப் புறப்பாட்டில் லட்சுமி நரசிம்மன் திருக் கோலம் தாங்கி தரிசனம் தருவதும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

இங்கு உள்ள திருவாய் மொழி மண்டபத்தில் பக்தர்கள் திருமணங்கள், சஷ்டி அப்த பூர்த்தி ரூ. 250/- காதுகுத்தல் ரூ. 25/-, பெண் அழைப்பு ரூ. 75/-, (36 கால் மண்டபம்) ரூ. 150/-, (திருவாய்மொழி மண்டபம்) ஆகிய கட்டணங்களில் சிறப்பாக நடத்திக் கொள்ள அனுமதிக்கப்படுகிறது. (கட்டணங்கள் மாறுதலுக்கு உட்பட்டவை)

ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் தைமாதத்தில் ஏதாவது ஒரு ஞாயிற்றுக்கிழமை அதிகாலை திருவல்லிக்கேணியில் பல்லக்கில் புறப்பட்டு சைதாப் பேட்டைக்கு அருகில் உள்ள ஈக்காட்டுத் தாங்கல் நிலத்தை அடைந்து திருமஞ்சனம் கண்டருளி மீண்டும் திருக்கோயிலுக்குத் திரும்ப எழுந்தருளுவது கண்கொள்ளாக் காட்சியாகும். இது திருஊரல் உற்சவம் என்ற சிறப்பு பெயர் பெற்றுள்ளது.

அ/மி. வேதவல்லித் தாயாருக்கும், அ/மி. ரங்கநாதருக்கும் மாசிமாதம் சுக்ல துவாதசி அன்று வெகு விமரிசையாக திருக்கல்யாண உத்ஸவம் நடைபெறுகிறது. புரட்டாசி மாதம் நவராத்திரி உற்சவம் தாயாருக்கு நடைபெறுகிறது. தாயாருக்கு நடைபெறும் லக்ஷார்ச்சனை விழா மிகச் சிறப்பானது.

ரங்கநாதருக்கு பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தில் முடியும் வண்ணம் ஐந்து நாட்களுக்கு பல்லவ உற்வம் நடைபெறுகிறது.

அ/மி. ராமருக்கு ஸ்ரீராமநவமி உற்சவம் 9 நாட்கள் நடைபெறுகிறது. வரதராஜப் பெருமாளுக்கு வைகாசி மாதம் பத்து நாட்களுக்கு உற்சவம் நடைபெறுகிறது.

ஆண்டாளுக்கு திருவாடிப்பூர உற்சவம் பத்து நாட்களும், மார்கழி மாதம் நீராட்ட உற்சவம் 9 நாட்களும் நடைபெறும்.

வைணவத் திருக்கோயில்களில் அதுவும் மங்களாசாஸனம் செய்யப்பட்ட 108 திவ்விய தேசமெனப்படும் திருக்கோயில்களுள், இத்திருக்கோயிலைப் போல் அதிகமான உற்சவங்களைக் கொண்டாடி வரும் திருக்கோயில்கள் எங்கும் இல்லை எனலாம். ஐந்து சன்னதிகளில் வெவ்வேறு திருநாமங்களில் எழுந்தருளும் பெருமாள்களுக்கும், தாயாருக்கும், ஆழ்வார் ஆச்சாரியார்களுக்கும் நானாவித உற்சவங்கள் வழுவாது மேற்கொள்வதால், இத்திருக்கோயிலில் ஏறத்தாழ வருட முழுவதுமே திருநாட்கள் தானே தவிர வெறும் நாட்கள் அரிது.

எனவே, அனைத்துத் திருநாட்களையும், உற்சவங்கள் மற்றும் உபயதாரர்கள் விபரங்களையும் தெரிவிக்கும் வருடாந்திர உற்சவ விபரக் கையேடு இத்திருக்கோயிலில் ஒவ்வொரு ஆண்டும் வெளியிடப்பட்டு வருகிறது. தெளிவான தகவல் தரும் இத்திருநாட்கள் விபரக்கையேட்டினை ஒவ்வொருவரும் வைத்திருத்தல் அவசியமானது என்பதால் எதிர்வரும் ஈஸ்வர வருடம் முதல் இக்கையேட்டினை நன்கொடையாளர் உதவியுடன் உபயதாருக்கும் சேவார்த்திகளுக்கும் வழங்கிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. செலவினங்கள் விளம்பரங்கள் மூலமே செய்ய உள்ளதால் கொடையாளர் / நிறுவனங்கள் உதவிட வேண்டுகிறோம்.

## உதய அஸ்தமனத் திட்டம்

இத்திருக்கோயிலில் தினமும் ஆறுகால பூஜை நடைபெற்று வருகிறது. தற்பொழுது சேவார்த்திகள் இப்பூஜையில் கலந்து கொள்ளும் வண்ணம் ஆறுகால பூஜைத்திட்டம் துவங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | விஸ்வரூபக் கட்டளை | ரூ. 2000/- |
| 2. | திருவாராதனக் கட்டளை | ரூ. 9000/- |
| 3. | உச்சிகாலக் கட்டளை | ரூ. 5000/- |
| 4. | நித்யானுசந்தானக் கட்டளை | ரூ. 4500/- |
| 5. | இராக்கால ஆராதனைக் கட்டளை | ரூ. 5000/- |
| 6. | அர்த்தஜாமக் கட்டளை | ரூ. 3000/- |

என உதய அஸ்தமனத் திட்டமாக ஆறு கட்டளைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. சேவார்த்திகள் இத்திட்டங்களில் (ஏதாவது ஒரு கட்டளைக் குக்கூட) வருடத்தில் ஏதேனும் ஒருநாள் தங்கள் விரும்பும் நாளில் விரும்பும் பெயரில் மேற்கண்ட விவரப்படி தொகை செலுத்தி எம்பெருமானின் திருவருளைப் பெறலாம். ஒருமுறை நீங்கள் செலுத்தும் முதலீட்டுத் தொகையின் வட்டி மூலம் வருடாவருடம் நிரந்தரமாகப் பூஜைகள் தொடர்ந்து வரும். பிரசாத மரியாதைகளும் அளிக்கப்படும்.

## நித்திய ஆராதனைத் திட்டம்

இத்திருக்கோயிலில் நித்தியப்படி பூஜைக்கு வருடத்திற்கு ஒருநாள் தாங்கள் விரும்பும் நாளில் விரும்பும் பெயரில் ரூ. 2000/- செலுத்தினால் அதில் இருந்து வரும் வட்டித் தொகையைக் கொண்டு பூஜை செய்யப்பட்டு பிரசாதம் வழங்கப்படுகிறது.


## வஜ்ராங்கி திருப்பணி

ஸ்ரீ பார்த்தசாரதி பெருமாளுக்கு வஜ்ராங்கி எனப்படும் வைர அங்கி சமர்ப்பிக்க எண்ணம் கொண்டு பல ஆண்டுகளுக்கு முன் திருப்பணி துவங்கப்பட்டு சங்கு, சக்கரம், முன் பின் கோல், முன் பின் கர்ண பத்திரம், திருவடி ஆகியவைகளே தற்பொழுது சிறப்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மற்றவைகளைச் சமர்ப்பிக்க ஆஸ்திகர்கள் தங்களால் இயன்ற பொருளுதவி செய்ய வேண்டுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

# மகப்பேறு அளிக்கும் மகோன்னத லிங்கம்

- நிறைமதி

பவானி அருள்மிகு சங்கமேஸ்வரர் திருக் கோயிலில் தனிச்சந்நிதியாக அமிர்தலிங்கேசுவரர் ஆலயம் உள்ளது. இங்குள்ள சிவலிங்கம் அமுதத்தால் ஆனதால் அமிர்தலிங்கம் என அழைக்கப்படுகின்றது.



அமிர்தலிங்கம்

இந்த அமுதலிங்கம் உண்டாகிய வரலாறு பின்வருமாறு:

தேவர்கள் அமுதத்திற்காகப் பாற்கடலைக் கடைந்த போது அமுதம் எழுந்த வரலாறு நாம் அறிந்த ஒன்று. திருமால் மோகினி வடிவத்தோடு எழுந்தருளி அசுரர்களை மயக்கித் தேவர்களுக்கு மட்டும் அமிர் தத்தை வழங்கினார். எஞ்சிய அமிர்தத்தைப் பொற் குடத்தில் நிரப்பிப் பராசரர் போன்ற முனிபுங்கவர் களுக்கு வழங்கவேண்டும் என எண்ணிக் கருடனிடம் அதைக் கொடுத்து அனுப்பினார்.

கருடாழ்வாரும் அமுதகும்பத்தோடு பறந்து வந்து பவானிக்கும் காவிரிக்கும் மத்தியில் உள்ள பத்ரிகாவனமாகிய திருநணாவை அடைந்து சிவபெரு மானைப் பணிந்து அங்கிருந்த பராசர முனிவரிடம் அமுத குடத்தை வழங்கினார்.

அசுரருக்குத் தெரியாமல் அதனைப் பாது காப்பான இடத்தில் மறைத்து வைத்தார் பராசர முனிவர்.

அசுரர்களின் தொல்லை எல்லாம் ஒழிந்த பின்பு அமுதக்குடத்தைப் பராசரர் அகழ்ந்தெடுத்த போது அந்த அமுதம் கல்லைப் போல் திரண்டு லிங்கவடிவமாகத் திகழ்ந்தது. அமுதம் புதைந்து கிடந்த பள்ளத்தில் உண்டான தீர்த்தமும் அமுதத்தீர்த்த மாகத் திகழ்ந்தது.

பராசரமுனிவர் அமுதலிங்கத்தைப் பிர திஷ்டை செய்து துதிசெய்தபோது இறைவர் எழுந் தருளிக் காட்சி கொடுத்து ''அமுதலிங்கத்தை வழி படுவோருக்கு வேண்டிய வரங்களை வழங்குவ தாகவும், குழந்தைவரம் வேண்டும் தாய்மார்களுக்கு அவ்வாறே குழந்தை வரம் அருளுவதாகவும் திருவாய் மலர்ந்தருளினார்.

இந்த அமுதலிங்கம் ஆவுடையாரின்மேல் எடுக்கவும், திரும்பவும் வைக்கவும் கூடிய நிலையில் இருப்பதால் மகப்பேறு இல்லாத தாய்மார்கள் இந்த அமுதலிங்கத்தை எடுத்து இடையில் வைத்துக் கொண்டு அச்சந்நிதியை வலம்வர மகப்பேறு உண்டா கின்றது.

நீடுபுகழ்மிக்க கூடுதுறையாம் பவானி அருள் மிகு சங்கமேசுவரர் ஆலயத்திலுள்ள அமுதலிங்கேசு வரரை வழிபட்டு

"பெறுமவற்றுள் யாம்அறிவது இல்லை
அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற''

என்று வள்ளுவர் போற்றும் மக்கள்பேற்றினை அன் பர்கள் பெற்று இன்புறுவார்கள் ஆக;

# அப்பரடிகள்

- ''கலைமாமணி'' அ. அருளரசு மாசிலாமணி
திருச்செந்தூர்

சைவநெறி தழைத்தோங்க சிவபெருமான் தண்ணருளால் அவதாரம் செய்தவர்கள் நாலவர் பெரு மக்கள். நால்வரில் தலையாய சிறப்புமிக்கவர் அப்பர் பெருமான்.

''திருநாவுக்கரசு வளர் திருத்தொண்டினநெறி வாழ
வரு ஞான தவ முனிவர் வாகீசர் வாய்மை திகழ்
பெரு நாமச் சீர்பரவலுற் றேன்; பேருலகில்
ஒரு நாவுக்குரை செய்ய ஒண்ணாமை
உணராதேன்''

என்று சேக்கிழார் பெருமான் கூறுகிறார்.

ஒரு நாவினாலே திருநாவுக்கரசர் பெருமையைச் சொல்ல முடியாது என்கிறார் சேக்கிழார். அப்படி இருக்கும்போது நாம் எப்படி சொல்ல முடியும்? ஒரு நோக்கமும் இல்லாதிருக்கும் நாம் எப்படி அவரின் அருள் நோக்கத்தை அறியமுடியும்? நாம் கண்ணிழந்த நிலையில் இருக்கின்றோம். கண்ணிழந்த நிலையில் நோக்கம் எங்கே இருக்கிறது? 'உண்பொருள் நாடி புகழ் இழந்த நிலையில் இருக்கும் நம்மைத் தேற்றுவது ஐயாறன் அடித்தலமே!' என இறைவன் திருவடியை புகலாகக் கொள்ள வேண்டும். சிவபெருமான் திரு வடி சிந்திப்பரியன. அவ்வாறு சிந்திப்பவர்க்குச்சிறந்து செந்தேன் முந்திப்பொழிவன. அந்தச் செந்தேன் கருது வார் இதயகமலத்தூறும் தேன்.

என் உள்ளம் இருள் நிறைந்திருக்கிறது எம் பெருமானே! உன் அருள்தேன் என் இதயம் புகுந்தால் என் இருள் நீங்கும்; இருள் தரு துன்பப் படலம் என்னை மறைக்கிறது. இருள் கண்ணை மறைக்கும்; ஞானக்கண் கொடுத்து, அருளினாலே இருளை நீக்கு வாய் என்று இறைவனை வேண்டி இறைவன் அரு ளால் கி.பி. 7-ம் நூற்றாண்டில் ஞான சூரியனாய் திருவாமூரில் அவதரித்தவர் அப்பரடிகள். வாழ்க்கை யில் இறைவனருளால் அவர் செய்த அற்புதங்கள் பல சுண்ணாம்பு காளவாயிலிட்ட போது பஞ்சாட்சர மகி மையினால் தீ அவருக்குத் தென்றலாகத் தவழ்ந்தது.

அவருக்கு அளித்த ஆலகாலவிஷம் அமுத மாயிற்று. கொலை செய்வதற்கு வந்த மதங்கொண்ட யானை அவரை சுற்றி வந்து வணங்கியது.

அவரைக் கல்லிலே கட்டிக் கடலில் போட்ட போது கல்லும் தெப்பமாக மிதந்தது.

திங்களூரில் பாம்பு தீண்டி இறந்த அப்பூதி அடிகளார் மகனை எழுப்புவித்தார்.

திருவீழிமிழலையில் படிக்காசு பெற்று பஞ்சம் தீர்த்தார். திருப்பைஞ்ஞீலியில் பொதிச்சோறு பெற்றார். இவை இவரது அருளியல் அற்புதத்துக்கோர் அரிய சான்று.

அப்பரடிகள் காலத்தில் குலம், கோத்திரம் முதலியவற்றால் மக்களிடையே வேற்றுமைகளும் உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற பேதங்களும் சமுதாயத் தில் நிலவியது. இறைவனின் பெயரால் இவ்வேற் றுமைகள் கூடாது என் எண்ணிய சீர்திருத்த செம்மல் அப்பர்

சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்!
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்!
பாத்திரம் சிவம் என்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற் பேறரே

என்று ''ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்று திருமூலர் கருத்தையும் வலியுறுத்தினார்.

அருளாளர்கள் ''பிறந்தோர் உறுவது பெருந் துன்பம்' பிறவாதார் அடைவது பேரின்பம்'' என் றார்கள். ''பிறவாமை வேண்டும்'' என்றார் காரைக்கா லம்மையார். ஆனால் அப்பர் பெருமான் பிறப்பை வேண்டுகின்றார்; எதற்காக? நடராஜப்பெருமானின் வில்போல் வளைந்த புருவத்தையும் கொவ்வைக்கனி வாயில் குமிள் சிரிப்பையும், கங்கையைத் தரித்த செஞ்சடை அழகையும், திருமேனி திருவெண்ணீற்று அழகையும், தூக்கிய திருவடியழகையும் என்றும் காண்பதற்காகப் பிறவி வேண்டும் என்கிறார்.

குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில்
குமிண் சிரிப்பும்
பனித்தசடையும் பவளம்போல் மேனியில்
பால் வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும்
காணப்பெற்றால்
மனித்த பிறவியும் வேண்டுவதே இந்த
மாநிலத்தே''

எம்பெருமானின் தூக்கிய திருவடியைக் காண்பதற்காக மனிதப் பிறவியை வேண்டுகிறார் அப்பர் அடிகள்.

மனித சமுதாயத்தை நோக்கி அவர் கூறும் அருள் மொழிகளைக் கேட்போம்.

வம்மின் மனிதர்காள்; இருந்து சொல்வன் கேண்மின்கள் ஏழைகாள்!

1. ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊன மில்லை
2. இடர்களைக் கழிக்க வேண்டில் இறைவனை ஏத்துமினோ?
3. இறைவனை நாளும் ஏத்த இடும்பை போம் இன்பம் ஆமே!
4. நீலகண்டனை நித்தம் நினைமினோ
5. எங்கும் ஈசன் எனாதவர்க்கு இல்லையே
6. இரப்பவர்க்கு ஈயவைத்தார்
   ஈபவர்க்கு அருளும் வைத்தார்
   கரப்பவர் தங்களுக்கு எல்லாம் கடு நரகங்கள் வைத்தார்!
7. விளக்கிட்டார் பேறு சொல்லின் மெய்நெறி ஞான மாகும்
8. அளப்பிலா கீதம் சொன்னார்க்கு அடிகள்தாம் அருளுமாறே
9. தம்மையுள் நோக்கிக் கண்டு தகவெனும் வேலி யிட்டுச்
   செம்மையுள் நிற்பர் ஆகில் சிவகதி விளையும் அன்றே!

மனிதன் எவ்வளவு ஆற்றல் பெற்றிருந்தாலும் முற்பிறவியில் வாடியதும் அடுத்த பிறவியில் வருவதும் தெரியாமல் வாழ்கிறான். தத்துவங்கள் சாத்திரங்கள் - தோத்திரங்கள் ஓதி உணர்ந்தாலும் இப்பிறவி மட்டும் தான் தெரியும். முற்பிறவியும், வரும் பிறவியும் உணர முடியாது. இதனால்தான் அப்பரடிகள்.

புழுவாய்ப்பிறக்கினும் புண்ணயா உன்னடி
என்மனத்தே வழுவாதிருக்க வரம் தரவேண்டும்.
கருவாய் கிடந்து உன் கழலே நினையும்
கருத்துடையேன்

எனப் பாடி அருளினார்.

அப்பர் பெருமான் தன்னம்பிக்கையுடன் இறைவனது நம்பிக்கையை முழுமையாக நம்பியவர். இறைவன் மலரடியை நெஞ்சில் உறுதியுடன் நினைத் தால் ''நான் யார்க்கும் அடிமை இல்லை. தன்பக்தன் மார்க்கண்டேயனுக்காக எமனையே காலால் எட்டி உதைத்த கால கண்டன் இறைவன். ஆகவே எமன் என்னிடம் வரமாட்டான். நரகம் எனக்கு கிடையாது. நோயுற் றடரமாட்டேன்; நொந்து மனம் வாட மாட்டேன், துன்பமும் துயரமும் எனக்கில்லை. நான் துணையாக கொண்டிருக்கும் என் தலைவன் அனைத்து உயிரையும் அடிமை கொண்டவன். அவன் சேவடி திறந்தால் எல்லா நன்மைகளும் எனக்கு கிடைக்கும்'' என ஆன்மீக விடுதலை உணர்வோடு முழங்கிய மகான் நம் அப்பர் அடிகள்.

''சங்கநிதி பதுமநிதி என்ற இரண்டு செல்வ மும் எத்தனை கோடிகள் என்று கணக்கிட முடியாது. அளவுக்கும் அடங்காது. அது வேண்டாம். மண்ணுலக ஆட்சியின் தலைமை பதவி - விண்ணுலக ஆட்சியின் தேவேந்திர பதவியும் எனக்கு நிலையான தல்ல; அது பொங்குவார் செல்வம் போல் தோன்றினும் மங்கு வார் செல்வம்'' என்று பதவியும் செல்வமும் நிலை யாது என்பதை இன்றைய மனித சமுதாயத்திற்கு அறிவிக்கும் அருளாளர் அப்பர். நான் காண விழை வது அங்கமெல்லாம் தொழுநோயால் குறைந்து, சீழ் வடிந்து துர்நாற்றம் வீசும் உடம்புடன்; பசுவை உரித்து உண்ணும் தாழ்ந்த குலப் புலையர்களாக இருந் தாலும் சிவபெருமானுக்கு அன்புடையவராக இருந்தால் அவரே நான் வணங்கும் கடவுள்'' என்று புரட்சி முழக்கம் செய்தவர் நம் அப்பர் அடிகள்.

தொண்டு செய்தே இன்பம் கண்டவர் அப்பர் பெருமான். ''தொண்டலால் துணையில்லை'' என்று கூறித் தொண்டு நெறி பரவிச் செம்மையாய் பணி செய்த வித்தகர்! சரியை மார்க்கத்திலேயே வாழ்ந்தவர். தன்னை உயர்வாக எண்ணி தற்பெருமை கொள்ளாது தன்னிடமுள்ள குறைபாடுகளை எண்ணிப் பாடிய பண்பாளர்.

''குலம் பொல்லேன்; குணம் பொல்லேன்; குறியும் பொல்லேன்; குற்றமே பெரிதுடையன் கோலமாய நலம் பொல்லேன்; ஞானியல்லேன்' என்றாரே! இவரிடம் இத்தனை குறைகள் இருந்தனவா? எல்லாம் உள்ள ஞானிகள் தன்னிடம் ஒன்றுமில்லை என்று தன்னடக்கத்துடன் கூறுவர். கயிலங்கிரி கைலாச பதி இவருக்கு சிரமம் தரக்கூடாது என்பதற்காக ஐயாறு வரவழைத்து தமது திருக்கோலத்தை காட்டியருளி னார். இக்காட்சியை கண்ட அப்பர் மாதர்ப்பிறைக் கண்ணியானை மலையான் மகளோடும் பாடி போதோடு நீர்சுமந்து ஏத்திப் புகுவார் அவர்பின் புகு வேன்; யாதும் சுவடுபடாமல் ஐயாறடைகின்றபோது காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன். கண்டேன் அவர் திருப்பாதம், கண்டறியாதன கண்

டேன் என்று தாம்கண்ட அற்புதக்காட்சியை நமக்குக் காட்டுகிறார்.

சிவபெருமானைக் கண்ட அப்பரடிகள் ''தொண்டருக்கும் தொண்டுசெய்யும் அத்தொண்டாற்ற வாரீர்'' என்று அழைக்கின்றார். ஐம்பெரும் பூதங்களால் உலகம் இயங்குகிறது. அதை வழிமுறைப் படுத்தி இயக்கும் இறைவன் பெரியவன். அவன் தொண்டர் உள்ளத்தில் குடிகொள்கிறான். ஆகவே தொண்டர் தம் பெருமை பேசவும் பெரிதே என்றார் ஔவை. தொண்டர்க்குத் தொண்டாற்றுவது சிவபெருமானுக்கு ஆற்றிடும் அருட்பணியாகும். இதையே சிவ ஞான போதம் மாலற நேயம் மலிந்தவர் திரு வேடத்தையும் அரனெனவே தொழவேண்டும் என்று வலியுறுத்துகிறது. ''பொய் அன்பிலா அடித்தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியமே'' என்று போற்றுகின்றார் அப்பர்.

நால்வர் காட்டிய நெறியில் நாம் வாழ வேண்டும் என்பதைத்தான் நம்முன்னோர் ''நாலுபேர் போன வழியில் போ'' என்றார்கள். சமய குரவர்கள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற நான்கு நெறியில் வாழ்ந்தனர். இதையே தாயுமானார் ''விரும்பு சரியைமுதல் மெய்ஞ்ஞானம் நான்கும் அரும்பு, மலர், காய், கனி போல் அன்றோ பராபரமே'' என்றார்.

சரியை என்ற தொண்டு நெறியினை வரும் காலத் தலைமுறையினர்க்குத்தம் வாழ்வால் காட்டியவர் அப்பர். இந்தத் தொண்டு நெறியே அன்பு நெறியாகி உலகியலை நெறிப்படுத்தும். ஆகவே ''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற தொண்டு நெறி வளர வழி கோலினார் அப்பர் அடிகள்.

அப்பர் பெருமானின் திருமுறைகளை சமய உணர்வு, தொண்டு நெறி, பக்தி மார்க்கம் ஆகியவற்றை நினைத்தாலே இனிக்கும். திருமுறைகளைத் தொட்டாலோ கை மணக்கும்; தேவாரத்தைப் பாடினால் வாய் மணக்கும். திருவாமூரில் புகழனார் - மாதினியார் திருமகனாக அவதரித்து, மருள் நீக்கியாராக வாழ்ந்தவர்; வினைப் பயனால் சமண சமயம் சென்று தரும சேனராக தலைமைப்பதவி ஏற்று, சமண சமயக் காவலராய் வாழ்ந்தார். திலகவதியார் திருவதிகைப் பெருமானை வேண்டியவாறு பெருமான் தரும சேனருக்கு சூலைநோய் கொடுத்தான். சூலை நோயின் துயரம் தாளாது தமக்கையாரிடம் வந்து திருநீறு பெற்று சூலை நோய் தீர்ந்து சைவ சமயம் சேர்ந்தார்.

சிவபெருமான், மருள் நீக்கியாரை சைவ சமய இருள் நீக்க வந்த திருநாவுக்கரசு என்று அழைத்தார்.

திருஞானசம்பந்தர் எனையாளும் அப்பர் என்றார். ஞானசம்பந்தரின் முத்துப் பல்லக்கை அப்பர் சுமந்தபோது ''அப்பர் எங்குற்றார்? என வினவ அடியேன் இங்குற்றேன்'' என்று அருளினார் அப்பர் பெருமான்.

வம்மின் மனிதர் காள்! என்று அழைத்தும்
''நிலை பெறுமாறு எண்ணுதியேல் வாநெஞ்சே''
என்று அழைத்தும் நெஞ்சே! பற்றி நின்ற பாவங்கள்
பாற்ற வேண்டில்
பரகதிக்கு செல்வதொரு பரிசு வேண்டில்
சுற்றிநின்ற சூழ்வினைகள் வீழ்த்த வேண்டில்
சொல்லுகேன் கேள் நெஞ்சே!

## நீங்கள் எப்படி?

ஏழு நற்குணங்கள் எனச் சான்றோர்கள் வகுத்துரைக்கும் குணங்கள் பின்வருமாறு:

ஏழ்மையிலும் நேர்மை
கோபத்திலும் பொறுமை
வறுமையிலும் பரோபகாரம்
துன்பத்திலும் துணிவு
செல்வத்திலும் எளிமை
தோல்வியிலும் விடாமுயற்சி
பதவியிலும் பணிவு.

இந்த நல்ல குணங்கள் உங்களிடம் இருந்தால் இறைவனை எளிதில் காணலாம். முயன்று குணவான் ஆகுங்கள்.

என அழைத்தும் பல அரிய கருத்துகளை அருளிச் செய்தார் நம் அப்பர் அடிகள்.

சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமும் கொண்டு என் செய்வீர்?
பாத்திரம் சிவம் என்று பணி திரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே!

நாம் வணங்கும் கடவுள் எங்கே இருக்கிறார் என்று இன்றைய சமுதாயத்திற்கு உணர்த்துகிறார் அப்பர்.

சங்க நிதி பதுமநிதி இரண்டும் தந்து
தரணியோடு வானாள தருவரேனும்
மங்குவார் அவர் செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க்கு ஏகாந்தர் அல்லராகில்
அங்கமெல்லாம் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்
கங்கை வார்சடைக் கரந்தார்க்கு அன்பராகில்
அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளாரே!

என்று கடவுளைக் காட்டி அறிவுறுத்துகின்றார் அப்பர் அடிகள்.

உழைப்பும் குறையாத முயற்சியும் கூர்த்த அறிவும் கொண்டு அனுபவத்தால் செயலாற்றினால் ஞானம் ஏற்படும். கடவுளுக்கு பூஜை செய்வதைவிட மனிதனுக்கு தொண்டு செய் என்று கூறிய பெருமான் மீண்டும் மனிதப்பிறவியினைத் தொண்டு செய்வதற்காக வேண்டினார்.

திருக்கோயில்கள் தோறும் உழவாரப்படை தாங்கி துப்புரவு பணி செய்து வந்த அப்பர் பெருமானின் திருநாமம் இறைவனின் திருப்பெயரை விட சிறந்தது என்பதற்கு அப்பூதியடிகள் ஓர் எடுத்துக்காட்டு திருநாவுக்கரசு என்ற நாமத்தை ஒருதரம் சொல்பவர்களுக்கு இந்திரன் போன்ற செல்வம் நிறையும்; செல்வம் நிறைந்த பின் இந்த செல் வத்தால் ஏதும் பயனில்லை என்ற ஞானம் ஏற்படும் என்பதை சிவப்பிரகாச சுவாமிகள்

''உற்றானல்லன் தவம்
தீயில் நின்றானல்லன்
ஊர் புனலாய் சென்றானல்லன்
திருநாவுக்கரசு என்னும்
ஒரு சொற் றான் எழுதியும் பேசியுமே
துன்பில் பதம் பெற்றான் என்னும்
அப்பூதி யெனும் ஒரு நம்பியே''

அப்பர் பெருமானின் திருத்தொண்டு நெறி உலகெல்லாம் பரவிட மானிடம் சிவநெறியில் திளைக்கும். சமுதாய மறுமலர்ச்சி ஏற்படும். சமய வேறுபாடின்றி சன்மார்க்கநெறி வளரும். வையகத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து ''என் கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற நெறியில் 7-ம் நூற்றாண்டில் வாழ்ந்த அப்பர் பெருமானின் அன்பு நெறியும் தொண்டு நெறியும் ஆன்மீக உணர்வும் இனி நாம் காணவுள்ள 21-ம் நூற்றாண்டுக்கும் மிக மிக அவசியமான கருத்துக்கருவூலம்; காலக்குயிலாய் அவதரித்த அப்பர் பெருமான் வழியில் செல்வோமாக.

★★★

## காலம் வரும்வரை காத்திருக்க வேண்டும்

மனமே பதற்றம் அடையாதே மெல்ல மெல்லத்தான் எதுவும் நடக்கும். தோட்டக்காரன் நூறு குடம்நீர் ஊற்றினாலும் பருவம் வந்தால்தான் பழம் பழுக்கும்.

பொறுத்திருக்கும் மனது இருப்பதால்தான் யானை இருந்த இடத்திலிருந்தே வயிராறச் சாப்பிட முடிகிறது. ஆனால் நாயோ அக்குணம் இல்லாததால் ஒரு துண்டுக்காக வீட்டுக்கு வீடு ஓடுகிறது.

சுழலில் உட்கார்ந்து கொண்டு பதற்றம் அடை வது ஏன்? மூழ்கிவிடும் பயத்தை ஒழித்து விடு.

இறைவன் திருவுள்ளம் என்னவோ அதுதான் நடக்கும்.

'நான்' 'என்னுடையது' என்ற எண்ணமே பெரிய நோய் இந்த நோயை விரட்டினால் நடப்பது எல்லாம் நல்லதாகவே நடக்கும்

- கபீர்

# வள்ளிச் சன்மார்க்கம்

- திருப்புகழ்மாமணி, மு. அருணகிரி

இவ்வுடற் சிறையில் 72 ஆண்டுகாலம், ஊழ்வினையை அனுபவித்துக் கொண்டிருக்கும் நாளில், ஆன்மீகப்பேரின் பத்தில் அடி எடுத்துவைக்கப் பணித்த இறைவனது கருணையைப் போற்றி, முதன் முதலாக அடியேன் திருப்புகழாதிய கவிகள் ஆழ்ந்து படிக்கத் தொடங்கிய நாளில், மனத்தில் தோன்றிய கருத்துக்களை, ஒரு கட்டுரையாக தொகுத்து வழங்கியுள்ளேன். பல கருத்துவேறுபாடுகள் சான்றோர் பெருமக்களுக்கு தோன்ற வாய்ப்பிருப்பினும், ஆச்சர்யம் ஒன்றுமில்லை. அனுபவவாயிலாக அறிவித்த கருத்துகளில் ஏதேனும் உபயோகப்பட்டால், அதுவே அடியேனது முயற்சியின் பலன் யாவர்க்கும் கிட்டியதாக நினைத்து மகிழ்வேன்.

அருணகிரிப் பெருமானால், பாடப்பெற்ற 16000 திருப்புகழ் பாக்களில், இன்றைய நாளில் உலகுக்கு 1340 பாடல்களே, அமரர், வ.த. சுப்ரமணியப் பிள்ளை எனும் புண்ணிய சீலரால் அரும்பாடுபட்டு, புத்தக வடிவில் வந்துள்ளதாலேயே முருகனது திருத்தலங்கள் பரக்க தெரிய வந்துள்ள போதிலும், மேலும் 16000 பாடல்களும் கிடைக்கப் பெற்றிருந்தால் அறியப்படாத பல தலங்களின் அருமை பெருமைகளை அறிய வாய்ப்பு ஏற்பட்டுஇருக்கும்.

அகக்கண் கொண்டு அருணகிரிநாதருடைய பாடல்களை ஆராயுங்கால், முருகப் பெருமானிடம், மூவாசைகளை விரும்பி விண்ணப்பித்துள்ளதை அறிய முடிகிறது.

**மூவாசைகள்**

1. தந்தைக்கு உபதேசித்த ரகசியப்பொருளை, தானும் அறிந்து கொள்ள ஆசைப்பட்டது.
2. முருகனது அருளால் பாடப்பட்ட திருப்புகழாதிய கவிகள், அவனது மார்பில் அணியும் மதாணியாய் விளங்க வேண்டும் என விரும்பியது.
3. ஏனைய அருளாளர்களைப் போல், பூதவுடல் பிரியும்வரை, காதலால் கசிந்து கண்ணீர் மல்கி துதிசெய்து, முத்தி நிலை அடைந்த போதிலும், அருணகிரியார் என்றும் இறவாத பேரின்ப நிலையை அடைந்து, அவனது திருக்கரத்தில் கிளியாக இருந்து பாடி மகிழ, சுகப்பதம் அருள வேண்டும் என முறையிட்டுக் கொண்டது. (சுகம் என்றால் கிளி)

தம் தலயாத்திரையின் போது, சுவாமி மலை வந்து முருகரை தரிசித்தும், முதலாவதாக, தந்தைக்கு உபதேசித்த ரகசியப் பொருளை தமக்கும் உபதேசித்தல் வேண்டும் என விரும்பியதை அன்னாரது பாடல்களிலிருந்தே அறியலாம். அப்பொருள் தொடர்புடைய பாடல்களைச் சிறிது ஆராய்வோம்.

***''கருப்புவில்லில்''*** எனத் துவங்கும் பாடலில்,

> உருத்திரனும் விருத்திபெற
> அநுக்ரகி யெனக் குறுகி
> யுரைக்க மறையடுத்துப் பொருள்
> உணர்த்து நாள் அடிமையும் உடையேனோ''

எனவும்,

**''கொண்டாடி கொஞ்சு'' எனும் பாடலில்,**

> உமை பங்காளர்க்கு அன்று பகர்பொருள்
> அருள்வாயே''

எனவும், ***''அகரமுதலெனயுரைசெய்''*** எனும் பாடலில்,

> புரத்ரயமெரித்த பெருமானும்
> நிருபகுருபர குமர என்றென்றும்
> பக்திகொடு பரவ அருளிய மவுனமந்தரம் தனை
> பழைய நினது வழியடிமையும்
> விளங்கும்படி இனிது உணர்த்தியருள்வாயே''

எனவும், இதனையே குறித்து,

''துத்தி நச்ச'' எனத்தொடங்கும் திருப்புகழில்,

> ''வேணியர்க்கருள்கூறும்
> புத்திசித்தி வாய்கனஞ்சுத்த சத்யவாசகம்
> புற்புதப் பிராணனுக்கு - அருள்வாயே''

என்றெல்லாம் கெஞ்சியும், இரங்கிக்கேட்டும் அந்த ரகசியத்தைத் தமக்கு அருளப்பெறாததால், அருணகிரியார், வேறு தந்திரங்களைக் கையாண்டு பார்த்தார்.

## அன்பிருந்தால் இறைவனைக் காணலாம்

உண்மை அன்பை உடையவரே
உலகம் அளந்த பெருமானை
அண்மை யாகக் கண்டிடுவார்
அல்லார் காணார் காணாரே

- கவிமணி தேசிக
விநாயகம்பிள்ளை

அதாவது, முருகா! உனது தந்தைக்கு உபதேசித்த ரகசியப் பொருளை எனக்கு உபதேசம் செய்ய உமக்கு மனமில்லையானால், ''வேண்டாமை'' என்கின்ற ஒன்றை (நிராசையை) அடைந்து, உள்ளம் மறக்கும் அன்புப் பேற்றினையாவது தந்தருளுக என வேறு பாணியில் இறைஞ்சி கேட்பது போல் வேண்டிப் பார்த்தார். இக்கருத்தினை ''மாண்டார் எனும் பணியும்'' எனத் துவங்கும் திருப்புகழில்,

சடையாண்டார் இறைஞ்ச மொழிந்ததை
வான் பூதலம் பவனங் கனல் - புனலான
வான்பூதமுங் கரணங்களும்
நான் போய் ஒடுங்க அடங்கலும்
மாய்ந்தால் விளங்கும தொன்றினை -
அருளாயேல்
வேண்டாமை யொன்றை யடைந்துள
மீண்டாறி நின் சரணங்களில்
வீழ்ந்தாவல் கொண்டுருகு
அன்பினையுடையேனாய்

எனக் கூறியுள்ளதால் அறியலாம்.

இந்தத் தந்திரத்துக்கும் முருகன் அகப்படவில்லை போலும்.

பின்னர், ''நீகங்கை சூடிக்கு செய்த உபதேசத்தை எனக்கு உரை செய்தால், உன் கௌரவம் சற்றேனும் குறைந்து போகுமோ'' எனச் சற்று நிந்தாஸ் துதியாக வைதும் பார்த்தார்.

இதனை,

''கங்கை வைத்த நம்பர் - உரைமாச்
செயல்மாண்டு சித்தம விழ நித்தத்
துவம் பெறப்பகர்ந்த - உபதேசஞ்
சிறியேன் தனக்கும் உரை செயில் சற்றுங்
குருத்துவங்குறையு மோதான்

(திரு. சயிலாங்கனை)

எனும் பாடலினால் வைதும்பார்த்தார்.

இங்ஙனம் பலவிதமாக அந்த ரகசியப் பொருளை விடாப்பிடியாக அறிய முயன்ற அருணகிரியார், வள்ளிமலைக்கு வந்ததும்; மலையை வலம் வந்து, மலைமுழுதும் முற்றும் ஆராய்ந்து, வள்ளியெம்பிராட்டியை மணக்க முருகனே, நாரதரின் வேண்டுகோளுக்கிணங்க, தணிகையினின்றும் தாமே, தமக்கென மயில்வாகனமிருந்தும், வலிய கால் நடையாகவே, வள்ளி மலைக்கு வந்து, வள்ளியோடு பல லீலைகள் புரிந்து விளையாடின தலமல்லவா இது என மகிழ்ந்து,

முருகா! நீ எனக்கு ரகசியம் என்று உபதேசித்த பொருள், நான் வள்ளிமலையைத் தரிசித்ததும், வெட்ட வெளிச்சமாய் புரிந்து கொண்டேன். நீ உபதேசித்த ரகசியமாவது, யாரொருவர், நான், எனது எனும் ஆணவ நிலை அற்று, என்னைவழிபடுகின்றார்களோ, அவர்களுக்கு நான் எளியன். குற்றேவல் செய்பவன் - என்பதல்லவா? அவ்வகையினைப் பின் பற்றி உண்மை வழிபாடு செய்த பிராட்டி வள்ளியாவார். இதைத் தானே, அப்பர் அடிகளும்,

''தன்னை மறந்தாள், தன் நாமம் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே''

எனக் குறிப்பிட்ட நிலையாகும்.

கடைசியில் முருகப் பெருமான், இந்த ரகசியத்தை, அருணகிரியார் வேண்டுகோளுக்கிரங்கி உபதேசித்தருளினார் என்பதை

''மிகுபரமாகும் பரமமாலயயின்
நேர்மையை யாவரும் அறியொணாததை
நீகுருவாயிது பகருமாறு செய்தாய்'' என,

''சுருதியாய் இயலாய்'' எனத்துவங்கும் பாடலில் அறிவித்துள்ளார்.

அவ்வுபதேசத்தின் சிறப்பைக் குறித்து, குறிப்பாக கந்தரனுபூதியிலும், சற்று வெளிப்படையாக கந்தரலங்காரப்பாடலிலும், தெள்ளத் தெளிவாக திருப்

புகழ் பாடல் ஒன்றிலும் அருணகிரியாரே கூறிப் போந்துள்ளதைப் பார்ப்போம். முதலில், கந்தரனுபூதியில் சுட்டிக் காட்டியதைச் சிறிது ஆராய்வோம்.

**''நாதா குமரா நம என்று அரனார்**
**ஓதாய் என ஓதியது எப்பொருள்தான்**
**வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்ப்**
**பாதா குறமின் பதசேகரனே'' -**

இப்பாடலில் வரும் முதல் இரண்டு சீரில் வரும் வினாவிற்குப் பதில், அப்பாடலிலேயே பின் வரும் இரண்டு சீர்களிலேயே வெகு குறிப்பாகக் கூறியுள்ளதைக் கவனிக்கலாம். அதாவது, ''வேதா முதல் விண்ணவர் சூடும் மலர்பாதனாய் நீ இருந்தும் குறமின் பதசேகரனே'' என்றாரே அதுதான் எவ்வாறு எனில், ''யான், எனது'' எனும் இரண்டும் எங்கே அற்றுள்ளவனோ, அங்கே இறைவனைக் காணலாம். அங்கே இறைவன் தானே சென்று காட்சியளிப்பான். வள்ளியம்மை, முருகனையே நாடி நின்ற காரணத்தால், முருகர், வள்ளியின் தினைப்புனத்துக்குத் தானே வலியசென்றார்.

குறமின் (வள்ளி) பதசேகரர் ஆனார். எனவே ''தன்னை இழந்தால் தலைவனைக் காணலாம்'' என்பதே இதன் ரகசியம் - பொருள். இந்நிலையை அனுஷ்டானத்தில் கொண்டு பின் பற்றியவள் வள்ளியம்மையே. இத்தகைய வள்ளியின் உயரிய நிலை உணர்ந்த முருகர், வள்ளியைத் தாமே வலிய சென்று கல்யாணம் செய்து கொள்ள விரும்பினார் என்பதைத் தாம்பாடிய கந்தரலங்காரப்பாடலில்,

**''கின்னம் குறித்தடியேன் செவி நீ அன்று**
**கேட்கச் சொன்ன**
**குன்னம் குறிச்சி வெளியாக்கி விட்டது -**
**கோடுகுழல்**
**சின்னம் குறிக்கக் குறிஞ்சிக் கிழவர் சிறுமிதனை**
**முன்னம் குறிச்சியில் சென்று கல்யாணம்**
**முயன்றவனே''**

எனப்பாடியுள்ளதைக் கவனிக்கலாம்.

மேற்சொன்ன பாடலின் கருத்து:- இறைவா என் மனத்தாசையை உணர்ந்து (நான் விரும்பிக் கேட்ட) ரகசியத்தை, நீ உபதேசித்தாய். அந்த ரகசியம் இன்ன தென்பதை, குறிஞ்சி நிலத்தைச் சார்ந்த ஊராகிய வள்ளிமலை எனக்குச் சொல்லாமல் அறிவித்து விட்டது.

எப்படி எனில், வேட்டுவச்சிறுமியை நாடி நீயே, தனக்கென்று மயில்வாகனம் இருந்தும், உன் பங்கயபதம் நோவ, கால் நடையாகவே வள்ளிமலைக் குச் **சென்று**, அவளிருந்த தினைப்புனத்தை அடைந்து, அவளைக் கல்யாணம் செய்ய முயன்றாய் ஆதலின் என்பதை இச்செய்யுளில் **சென்று** என்னும் வார்த்தை எத்துணை கருத்தாழத்துடன் கூடியது என்பதனை நினைக்கும் தோறும், உள்ளம் புல்லரிக்கிறது. இதே கருத்தை மற்றோர் திருப்புகழிலும், ''வள்ளிமலை சென்று வள்ளியை மணந்த - பெருமாளே'' எனவும் கூறியுள்ளதை நோக்குங்கால், இறைவன் அடியார் களை ஆட்கொள்ள தானே வலிய சென்று அருட் புரிவான் என்பது தான் அவனது ஒப்பற்ற கருணை. இப்பாடலில் வள்ளியம்மை கடைப்பிடித்த நன் னெறியே இறைவனை வசப்படுத்தும் நெறி என்றும், இதனையே கைப்பற்றுக எனவும் அருணகிரியார்க்கு முருகர் உபதேசித்தார் எனவும் கொள்ள முடிகிறது. இதே கருத்தினை மணிவாசகர் தாம்பாடிய பாடல் ஒன்றில்,

**''நானேயோதவம் செய்தேன் சிவாய**
**நமவெனப் பெற்றேன்**
**தேனாய் இன்னமுதமுமாய் தித்திக்கும்**
**சிவபெருமான்**
**தானே வந்து எனதுள்ளம் புகுந்து அடியேற்கருள்**
**செய்தான்**
**ஊனாரும் உயிர்வாழ்க்கை ஒறுத்தன்றே**
**வெறுத்திடவே''**

இப்பாடலில், தானே வந்து என்ற பதம் மிகவும் சிந்திக்க வைக்கும் இடம். அதனால் இது போன்ற நெறியைத்தான் அருணகிரியார் சுருக்கமாக ''வள்ளிச் சன்மார்க்கம்'' எனக் குறித்து பாடியுள்ளார். இதுவே ''வள்ளி அனுஷ்டித்த நன்னெறி'' என்பதாகும்.

பின்னும் இதைப்பற்றித் திருப்புகழில் வெளிப்படையாகவே பாடியுள்ளதைப் பார்க்கலாம். அதாவது முருகா! நீ சிவனுக்கு உபதேசித்த ரகசியத்தை ''வள்ளிச் சன்மார்க்கம்'' எனத் தெரிந்து கொண் டேன் என்பதனை

**''வள்ளிச் சன்மார்க்கம் விள்ளைக்குநோக்க**
**வல்லைக்குள் ஏற்றும் - இளையோனே'',**

எனப் பாடியுள்ளதைக் கவனிக்கலாம்.

இதன் பொருள்:- வள்ளிச்சன்மார்க்கம் - வள்ளி அனுஷ்டித்த நல்வழியே தலைவனை (கடவுளை) வசப்படுத்தும் வழி என, நோக்கவல்லைக்குள் - ஒரு நொடிப் பொழுதில், விள்ஐக்கு - ரகசிய உபதேசம் எது என கேட்ட தந்தைக்கு,

ஏற்றும் - அவர் காதில் சொன்ன - இளையோனே - குழந்தைக் குருநாதனே என்பதாகும். இங்ஙனம் இந்த ரகசியத்தை க்ஷண நேரத்தில், முருகன் சிவபிரானுக்கு உபதேசித்த தலம் திருத்தணியாகும். அதனால் இத்தலத்துக்கு க்ஷணிகாசலம் என வட மொழியிலும், கடிகாசலம் என தமிழிலும் பெயர் வழங்குகின்றது.

# கம்பன் கண்ட பரதன்

- முனைவர் இரா. செல்வ கணபதி,
மயிலாடுதுறை

(முன் தொடர்ச்சி)

வசிட்டன் பரதனைத் தடுத்து

'அன்னை தீமையால் அரசன் நின்னையும்
துன்னு துன்பத்தால் துறந்து போயினான்'

என்று பரதன் உளம் வெறுப்பக் கூறுகின்றான், பெற்றெடுத்த தந்தையே, மகனை, இனி அவன் என் மகன் அல்லன் என்று கூறினால், அது எத்துணைப் பேரவலம்! தாய் செய்த பிழைக்காகப் பரதன் தந்தையால் தண்டிக்கப்படுகிறான். 'தாய் எனக்கு வழங்கிய பேறு ஈதோ' என்று மாழ்குகின்றான்.

'என்னை! என்னையே ஈன்று காத்த
அன்னையார் எனக்கு அழகு செய்தவா!'

என்று பேசிக் கழிவிரக்கம் கொள்கிறான்.

பரதன் நாடு திரும்பு முன்னர், திரைமறைவில் நடந்த நாடகத்தை அவன் அறியமாட்டான். வசிட்டன் மொழிந்த அறிவுரைகளைக் கேட்ட பின்னரும், கைகேயி தன் கருத்தை மாற்றிக் கொள்ளத் தயாராக இல்லை. வசிட்டன், அவளை நிந்தித்து விட்டுத் தயரதனிடம் நிலைமை கூறுகின்றான். பெருஞ்சினம் கொண்ட தயரதன், கைகேயி என் மனைவி அல்லள் என்று அவளைத் துறக்கிறான்.

'இன்னே பலவும் பகர்வான்
இரங்கா தானை நோக்கி
சொன்னேன் இன்றே இவள் என்
தாரம் அல்லள்: துறந்தேன்:'

என்று கூறி அவளைத் துறக்கிறான். வேள்வித் தீ முன்னர், அம்மி மிதித்து அருந்ததி பார்த்து மணந்தவளை, ஆத்திரத்தில் ஒரே வார்த்தையில், இவன் என் தாரம் அல்லள் என்பதால், மனைவி என்னும் உறவு அற்று விடாது. என்றாலும், சினத்தின் உச்சியில், சிந்தனைக்கு இடமில்லை என்று கம்பன் காட்டுகிறான்.

தசரதன் தொடர்ந்து பேசும்போது, கற்பார் நெஞ்சம் பதைக்கிறது. கைகேயியின் மேற்கொண்ட சினம், யாதொரு காரண காரியமும் இன்றிப் பரதன் மேல் திரும்புகின்றது - அவன், இனி என் மகன் அல்லன் என்கிறான்.

'மன்னே ஆவான் வரும் அப்பரதன்
தனையும் மகன் என்று
உன்னேன் முனிவா அவனும்
ஆகான் உரிமைக்கு'

என்று கூறும் தசரதன் உரையில், ஆத்திரம் மட்டுமே எஞ்சுகிறது.

உண்மையிலேயே பரதன் பற்றித் தயரதன் கருத்து யாது? அதை அறிந்து கொள்ளவும், கம்பன் ஒரு இடம் அமைக்கின்றான். முன் உறுதி கூறிய, இரண்டு வரங்களில், ஒன்றால் பரதன் நாடாள வேண்டும்: பிறிதொன்றால் இராமன் காடாள வேண்டும் என்று கைகேயி வரங்கேட்கிறாள். பரதன் உயர் பண்புணர்ந்த தயரதன், கைகேயியைச் சினந்து பின் பணிந்து அவள் கால்களில் வீழ்ந்து, 'கொள்ளான் நின் சேய் இவ்வரசு' என்று, நீ வேண்டியவாறு, நான் தந்தாலும், பரதன் இவ்வரசாட்சியை ஏற்கமாட்டான் என்று நம்பிக்கை பூண்கிறான். அவனே, பின் தன்நிலை இழந்து, பரதன் இனி, என் மகன் அல்லன் என்கிறான். ஒவ்வொருவரும், தத்தம் பங்கிற்குப் பரதனைச் சின்னா பின்னப் படுத்தும் அவலம் நம் நெஞ்சைப் பிழிகிறது.

வசிட்டன் உரை கேட்டுப் பரதன், மேலும் அழுது அரற்ற, சத்துருக்கனனைக் கொண்டு ஈமக் கடன்கள் இயற்றப்படுகின்றன. அனைவரும் நாடு சேர்கின்றனர். பின் வசிட்டன் பரதனை அணுகி,

'உந்தையோ இறந்தனன்: உம் முன் நீத்தனன்
வந்ததும் அன்னைதன் வரத்தில்: மைந்த நீ
அந்தம் இல் பேரரசு அளித்தி'

நீ நாடாள வேண்டும் என்று வேண்டுகின்றான். அக்காலை, பரதனின் உண்மையான மனநிலை நன்கு வெளிப்படுகிறது.

'நல்நெறி என்னினும் நான் இந்நானில
மன்னுயிர் பொறை சுமந்து இருந்து வாழ்கிலேன்
அன்னவன் தனைக் கொணர்ந்து அலங்கல் மாமுடி
தொல் நெறி முறைமையின் சூட்டக் காண்டிரால்'

என்கிறான் ஒரு வேளை, இராமன் நாடு திரும்ப மறுத்தால், என்ற வினாவை, அவனே எழுப்பி விடை காண்கிறான்.

''திருக்கோயில்'' இதழுக்குத் திருவாவடு துறை ஆதீனம் வழங்கியுள்ள ஆசி

நமசிவாயம் வாழ்க! நாதன்தாள் வாழ்க!

திருக்கோயில் இதழில் ''தமிழ்நாட்டின் தன்னிகரில்லாக் கவிஞன்'' என்ற தலைப்பில் வெளியான கட்டுரை சிறப்பாக இருந்தது, இதுபோன்ற தகுந்த கட்டுரைகளை வெளியிட்டு வரும் தங்களை வாழ்த்தி சீர்வளர்சீர் குருமகா சந்நிதானம் அவர்கள் பிரசாதம் அனுப்பி உள்ளார்கள்.

'அன்று எனின் அவனொடும் அரிய கானிடை
நின்று இனிது இருந்தவம் நெறியின் ஆற்றுவென்
ஒன்று இனி உரைக்கின் என் உயிரை நீக்குவென்'

என்றான் பரதன். அவன் உறுதி கண்டு, அவையோர் அவனைப் புகழ்கின்றனர். 'கொள்ளான் நின் சேய் இவ்வரசு' என்ற, தயரதன் நம்பிக்கையைப் பரதன் மெய்ப்பிக்கிறான். ஆனால், இவன் என் மகன் அலன் என்ற பழி தொடர்கிறது. அதனை நீக்கும் நாள் காப்பியத்தின் நிறைவில் வருகிறது.

இராமகாதையில், தொடக்கம் முதல் இறுதி வரை பரதனை, உள்ளவாறு மதிப்பிட்டு அறிந்த ஒரே பாத்திரம் இராமன் மட்டுமே. தசரதன், சினத்தின் உச்சியில் நின்று 'கைகேயி என் மனைவி அல்லள்: அவள் வயிற்றில் பிறந்த பரதன் என் மகனும் அல்லன்' என்று உரைத்து மாய்ந்த செய்தி இராமபிரானுக்கு எட்டியிருக்க வேண்டும். இந்தச் சிக்கலிலிருந்து அவர்களை விடுவிப்பது எவ்வாறு என்று, இராமன், நீளச் சிந்தித்திருக்க வேண்டும். அவனோடு இணைந்து, கம்பனும் காலம் பார்த்திருக்கிறான். வனவாழ்வு: சூர்ப்பணகை வரவு: இராவணன் சீதையைக் கவர்தல்: இராமன் இலங்கை சென்று அவளை மீட்டல் என்று நீண்டு சென்ற பதினான்கு ஆண்டுகளில், இடையிடையே பரதன், பற்றிய நினைவு இராமனுக்கு வருதலும், அப்போதெல்லாம் அவனை உயர்வாகப் பேசுதலும், காப்பியத்தில் இடம் பெறுவன. தந்தை மீது அளப்பரிய பற்றுக் கொண்ட இராமன் திருவுள்ளத்தில், தசரதன் மனைவியையும், மகனையும் துறந்தமை மகிழ்வைத் தந்திராது. இந்தச்சிக்கலை விடுவிக்க, ஒரு அரிய வாய்ப்பு அமைந்தது. இராமன், அதனைப் பயன்கொண்ட நளினத்தில், பரதன் பால் அவன் கொண்டிருந்த அன்பு பளிச்சிடுகிறது.

சீதை குற்றமற்றவள் என்பதை எடுத்துரைத்து, இராமனைத் தெருட்டுமாறு, சிவன், துறக்கத்திலுள்ள தயரதனைப் பணிக்கின்றான். அவனும், இலங்கை போந்து, சீதையைத் தேற்றுகின்றான். இலக்குவனைத் தழுவிப் பாராட்டுகிறான். பின் இராமனை அணுகி, 'யான் உனக்கு ஈவது ஒன்று கூறுதி: உயர் குணத்தோய்' என அவனை வரம் கேட்குமாறு பணிக்கிறான். இதனைப் பயன்கொண்டு, இராமன் தந்தையிடம்,

'தீயள் என்று நீ துறந்த என் தெய்வமும் மகனும்
தாயும் தம்பியும் ஆம் வரம் தருக'

என்று வேண்டுகின்றான். கம்பன் பாடலை நிறைவிப்பதில் ஓர் அழகு உண்டு. இவ்வாறு இராமன் வரம் கேட்டதும்,

'வாய்திறந்து எழுந்து ஆர்த்தன
உயிர் எலாம் வழுத்தி'

என்று நிறைவித்து, இராமன் பண்பும், பழிதுடைக்கும் பாங்கும் கண்டு, மன்னுயிர் எல்லாம் மகிழ்ந்து ஆர்த்தன என்கிறான் கம்பன்.

அப்போதும், தயரதனுக்குக் கைகேயி மேல் கொண்ட சினம் தணிந்திலது. பரதன் என் மகனாகி, நின் காதல் தம்பியாகட்டும். ஆனால், நின் முடியினைப் பறித்து, உன்னை, இவ்விரதக் கோலத்திற்கு ஆளாக்கியபாவி கைகேயி மேல் என்றும் என் சினம் நீங்காது என்றான். இராமன் மேலும் வேண்ட, தயரதன் கைகேயியை மனைவியாக ஏற்கிறான்.

காப்பிய நிலையில், இறந்த தயரதனை, மீண்டும் மண்ணுலகுக்குத் தருவித்து, அவன் வாய்மொழி வழி, பரதனைக் குற்றமற்றவனாகக் காட்டும் கவித்திறம், ஆழம் மிக்கது. காப்பிய நாயகனாகிய ராமனுக்கு இணையாகப் பரதனைப் படைத்துக் காவியத்தின் இணைத் தலைவனாக உருவாக்கி வளர்க்கும் கவிஞன், அவன் பழியொடு நின்றான் என்று முடித்தால், பாத்திரத் தன்மைக்கு இழுக்கு வந்து சேரும். அக்குற்றத்திலிருந்து அவனை விடுவிக்க முயலும் கவிஞனின் அரிய முயற்சியில் பரதன் பாத்திரம், பட்டை தீற்றப் பெற்று, உன்னத வைரமாக ஒளி வீசுகிறது.

ஈன்றணிமையுடைய தாய்ப்பசு, தன் கன்றின் அருகில் வருவாரை எல்லாம், பகைத்துச் சீற்றம் கொள்ளும். கன்றுக்குப் புல் தரவும், நீர் வழங்குவதற்கும் வருவாரையும் கூட, அன்பு மிகுதியால், இவர் நம் கன்றுக்குத் தீங்கு இழைத்து விடுவாரோ

என்று ஐயுறுவது, தாய்ப்பசுவின் இயல்பேயாகும். அது போல் இராமன் மீது கொண்ட அளவற்ற அன்பால், பரதனை உள்ளவாறு மதிப்பிட்டு அறியாது, பகைத்துப் பின் அவன் பண்பில் உருகும் இரண்டு பாத்திரங்கள் இராமகாதையில் உண்டு. ஒருவன், உடன் பிறந்த தம்பியாகிய இலக்குவன், இன்னொருவன் இராமன் உவந்தேற்ற தம்பியாகிய குகன், அன்னார் சீற்றங்களுக்குப் பின் எழுந்த தெளிவில், பரதன் மாணிக்க மணியாக ஒளிவிட்டுச் சுடர்கிறான்.

சுமித்திரை, இரண்டு சிங்கங்களைப் பெற்றெடுத்தாள். ஒருவன், இலக்குவன், மற்றவன் சத்துருக்கனன். முன்னவன் இராமனுக்குத் தொண்டன். பின்னவன் பரதனுக்குத் தொண்டன். இணை பிரியாத இவ்விரட்டையர்களில் பரதன் சத்துருக்கன் உறவு. இராமகாதையில் விரிவாகப் பேசப்படவில்லை. சத்துருக்கனனும், இலக்குவனுக்கு இணையாகப் பரதன் மேல் அன்பு பூண்டவன். அவன் பேசும் ஓரிரு இடங்களிலேயே, அவனைக் கம்பன் நம் நெஞ்சில் நிறுத்துகின்றான். கானகம் சென்ற இராமன், குறித்த நாளில் அயோத்திக்குத் திரும்பவில்லை. பரதன், முன் உரைத்தவாறு தீப்பாய்ந்து உயிர்விடத் தீர்மானித்துத் தம்பி சத்துருக்கனனை அழைக்கிறான். அழைத்து,

'சொன்ன நாளில் இராகவன் தோன்றிலன்
மின்னு தீயிடை யான் இனி வீடுவன்
மன்னன் ஆதி என் சொல்லை மறாது'

என்று தன் வேண்டுகோளை அவனுக்குத் தெரிவிக்கிறான். கேட்ட சத்துருக்கனன் விம்மி, வெய்துயிர்த்து, நான் உனக்கு என்ன பிழை செய்தேன் என்று கோபம் கொண்டு, அவன் சொல் மறுத்துப் பேசுகிறான். கம்பனில், ஓர் அழகான அர்த்தம் நிறைந்த பாடல், சத்துருக்கனன் கூற்றாக இடம் பெறுகிறது.

'கான் ஆள நிலமகளைக் கைவிட்டுப்
போனானைக் காத்து, பின்பு
போனானும் ஒரு தம்பி: போனவன்
தான் வரும் அவதி போயிற்று என்னா
ஆனாத உயிர்விட என்று அமைவானும்
ஒரு தம்பி: அயலே நாணாது
யானாம் இவ்வரசு ஆள்வேன்? என்னே
இவ்வரசாட்சி இனிதே அம்மா'

இலக்குவனையும், பரதனையும் ஒரு சேரப் புகழ்ந்து பேசி, நாட்டாட்சியை ஒரு போதும் நான் ஏற்க மாட்டேன் என்று கூறும் சத்துருக்கனன் கூற்றில், பரதனின் பண்புகள் பிரதிபலிக்கக் காண்கிறோம்.

இலக்குவன் நிலை வேறானது. அவன் காப்பியத்தில், இராமனின் நிழலாகக் கதை முழுவதும் வருகிறான். அவன், இராமனுக்குத் தான் இன்றியமையாதவன் என்று, ஒரு போதும் கருதாதவன். மாறாக, இராமனைத் தன் வாழ் முதலாகக் கருதி வாழ்பவன். நீர் குளத்தில் இருந்தால்தான், மீன் உயிர் வாழும். நீரை நீங்கினால், மீனுக்கு வாழ்வேது? கானகம் செல்லும் உன்னைப் பிரிந்து, ஒரு நொடியும் தனித்திரேன் எனக் கூறி, இராமனைப் பின் தொடர்ந்தவன். இராமனுக்குத் தவறு இழைத்ததாகத் தோன்றினால், இன்னார், இனியார் என்று பாராது, வெகுளும் பேரன்பில் தலை நிற்பவன். இந்த அளப்பரிய அன்பில், அவன் பரதனைப் பெரிதும் பகைக்கிறான். அவன் கோபக்கனல் கண்டு, இராமனே அஞ்சும் நிலை வருகிறது.

கைகேயி சூழ்வினையால், இராமன் காடு செல்வான் என்பதை அறிந்த இலக்குவன், பெருஞ்சீற்றம் கொள்கிறான். கைகேயி பால் கொண்ட சினம், பரதன் மேல் பாய்கிறது. இந்தத் தீயவள், சிங்கத்துக்கு ஊட்ட வேண்டிய இனிய ஊனை, நாயின் சிறு குட்டிக்கு, ஊட்ட நினைத்தாள் என்று ஏசுகின்றான். அவன் வில்லின் நாண் ஒலி கேட்டு, இராமன் இலக்குவன் இருப்பிடம் சேர்கிறான். நின் சினத்தின் காரணம் யாதென வினவுகின்றான். இலக்குவன்,

- நின்னை அம்மௌலி சூட்டல்
'செய்யக் கருதி தடைசெய்குநர் தேவரேனும்
துய்யச் சுடு வெங்கனலின் சுடுவான்
துணிந்தேன்'

என்று வீரமொழி பேசுகின்றான். அவன் கூற்றில் தயரதன், கைகேயி, பரதன் மூவருமே இராமன் காடேகக் காரணர்கள் என்ற கருத்து நிலவுவதை இராமன் உணர்கிறான்.

'இலக்குவனே! இந்த அரசை ஏற்றுக் கொள் என்று, தந்தை தசரதன் கூறியவுடன், அதனை மறாது ஏற்றுக் கொண்ட என்பால் குற்றம் உண்டே அன்றி, மன்னவன் இழைத்த குற்றம் ஏதும் இல்லை. இதற்கு நீ ஏன் பிறரைக் குற்றம் காண்கிறாய்' என்று சமாதானம் கூறுகின்றான். பின், இம் மாற்றங்கள் எவ்வாறு நிகழ்ந்தன என்ற வினாவிற்கு, இராமன் விதியைக் காரணம் காட்டுகின்றான். கம்பனின், அரியபடைப்புகளில் ஒன்று இராமன் கூற்றாக வரும் இப்பாடல் ஆகும்.

(தொடரும்)

★★★

# கம்பனும் திருமுறைகளும்

## 9. கம்பனும் சேக்கிழாரும்

– கம்பன் கவிநயமணி வே. தியாகராஜன்

தமிழ் நாட்டின் இருகண்கள் கம்பரும் சேக்கிழாரும் என்றால் அது மிகையாகாது. இருவருடைய காவியங்களும் ''உலகம்'' என்ற சொல்லுடன் ஆரம்பிப்பது ஒன்றே இவ்விரு பெரியோர்களும் ஒரே விதமான தெய்வீக நிலையினர் என்று எண்ணத் தூண்டுவதுடன் உலக நாயகனான நடராசப்பெருமானே ''உலகெலாம்'' என அடியெடுத்துக் கொடுத்தது எவ்வளவு பெருமை! **உலகம் என்பது உயர்ந்தோர்களைக் குறிக்கும்** என்ற உண்மையும் சிந்திக்கத்தக்கது.

கடலோரத்தில் உள்ள ஊற்றின் தண்ணீரைக் குடித்த நாய் கடல் பூராவும் குடிக்க ஆசை கொள்ளுவதுபோல அடியேன் அளவில்லாத பெருமையுள்ள சிவனடியார்களைப்பற்றிப் பேசுதற்கு விரும்புகிறேனே என அவையடக்கம் கூறுகிறார். ஆங்கிலத்தில் நாயை **DOG** என்ற சொல்லால் குறிப்பர். **D. Duty** - கடமையைச் செய்தல். **O = Obedience** அடங்கி நடத்தல் **G: Gratitude** = நன்றியுடனிருத்தல் என்பதால் Dog என அழைத்தனர் என்பர், இவ்வளவு நல்ல குணங்களுடைய பிராணி எந்த மிருகமும் செய்யாத ஒரு காரியத்தைச் செய்கிறது. தான் வாந்தி எடுத்ததையே மீண்டும் உட்கொள்ளுகிறது. பல பிறவிகள் எடுத்து, பிறவி வேண்டாமென வெறுத்த நான், மீண்டும் பிறந்து சிற்றின்பம் முதலானவைகளை விரும்புகிறேன். இது நாயின் குணம் போன்றது தானே என எண்ணி **ஒரு சுணங்கனை ஒக்கும் தன்மையேன்** எனக் குறித்தார் போலும்! (இன்னொரு அழகிய உண்மை. **Dog** என்ற சொல்லைத் திருப்பிப் படித்தால் God என இறைவனைக் குறிப்பதாக ஆகி விடுகிறது. அப்போது **G = Generator** உண்டாக்குதல் (படைத்தல்). **O = Organiser** ஒழுங்குபடுத்தல் (காத்தல்) **D = Destroyer** = அழிப்பவர் என இறைவனது முத்தொழில்களையும் குறிக்கின்றது.)

கம்பன் பாற்கடல் ஓரத்தில், சிறிது ருசிகண்ட பூனை பேராசை கொண்டு நிற்பது போல நிற்கிறேன் என அவையடக்கம் கூறினார். இராமாயணத்தில் பொல்லாதவர்களே கிடையாது. இராமபிரான் காடு செல்வதையறிந்து யாவரும் கண்ணீர் விட்டனர் எனக் கூறிய கம்பன் **கிளர்மாடத்து உள்ளுறையும் பூசையழுத** எனக் குறிப்பிட்டு பேராசை கொண்ட பெரும்பூனை கூட இராமபிரான் காடுசெல்வது கேட்டு அழுதது எனக் குறிப்பிட்டார்.

சேக்கிழார் பெருமான் தன் மீது அன்பு காட்டிய அநபாய சோழனைப்பற்றித் தன் நன்றியைத் தெரிவிக்கும் முறையில் கூறிய மாதிரி கம்பன் தனது காவியத்தில் தன்னைத் தாங்கிய சடையப்ப வள்ளலைக் குறித்தார்.

கைலைமலையைப்பற்றிப் பேச வந்த சேக்கிழார் பெருமான் ''நாலு வேதங்களும் மூன்றுலகங்களும் செய்த புண்ணியம் திரண்டு கைலைமலையாகவந்தன. அதனாலேயே இறைவன் அதில் வீற்றிருந்தார் போலும் எனக்

அண்ணல் வீற்றிருக்கப் பெற்றது ஆதலின்
நண்ணு மூன்றுலகும் நான் மறைகளும்
எண்ணில் மாதவம் செய்ய வந்தெய்திய
புண்ணியந் திரண்டுள்ளது போன்றது

என்று பாடியுள்ளார்.

இதே வர்ணனையைக் கம்பன் சுக்ரீவன் இராமபிரானைக் கண்டபோது ''பிரமதேவனால் படைக்கப்பட்ட உலகங்களில் உள்ள மக்கள் யாவரும் செய்த தவம் ஒன்றாகத் திரண்டு இரண்டாகப் பிரிந்து இராம இலக்குவர்களாக உருக்கொண்டு வந்துவிட்டதோ? என அவர்களை நோக்கி பிரமித்து நின்றான் சுக்கிரீவன்'' என்று கூறினார்.

நோக்கினான் நெடிது நின்றான் நொடிவரும் கமலத்தண்ணல்
ஆக்கிய உலகமெலாம் அன்று தொட்டு இன்று காறும்
பாக்கியம் புரிந்த வெல்லாம் குவிந்திரு படிவமாகி
மேக்குயர் தடந்தோள் பெற்று வீரராய் விளைந்ததோ? என்றான்.

★★★

சேக்கிழார் மனுவென்னும் அரசனைப் பற்றிக் கூறும்போது உலகத்து மக்களான உடல்களுக்குத் தானே உயிராக இருந்தார் என்றார் சேக்கிழார் பெருமான்.

மண்ணில் வாழும் மன்னுயிர்கட்கெல்லாம்
கண்ணும் ஆவியும் ஆம்பெரும் காவலன்

## திருக்குறள் ஒன்று பயின்றால் போதும்

புத்தகக் காட்டினிலே புகுந்து
புத்தி மயங்குவதேன்
புத்தியொடு இந்நூலை நிதமும்
படித்தல் போதுமையா

– கவிமணி தேசிக
விநாயகம்பிள்ளை

கம்பன் உலகத்தையே உயிராகவும் அவ்வுயிரைத் தனக் குள்ளே வைத்த உடலாகவும் விளங்கினான் தயரதன் எனக் கூறியருளினார்.

வையம் மன்னுயிராக அம்மன்னுயிர்
உய்யத் தாங்கும் உடலன்னமன்னனுக்கு

என்று கூறியதுடன் எல்லா உயிரும் தனதே என எண் ணிய தயரதன் உயிரைத் தாங்கும் உடல் போலிருந்தான் எனத் தசரதரைக்குறித்தார் **''உயிரெலாம் உறைவதோர் உடம்பும் ஆயினான்''** என்றார்.

ஒரு நல்லவரின் தேசம் அவர் எப்படிப்பட்ட வர் எனக் காட்டக்கூடிய தன்மையில் இயற்கைக் காட்சிகளே அமையும் என்பர் மகாகவிகள்.

அன்னப்பறவை தன் குஞ்சைத் தாமரையில் கண்வளரவிட்டது. அந்த நீர் நிலைக்குத் தண்ணீர் குடிக்க வந்த எருமையொன்றின் மடி சுரந்து பால் வழிந்து அன்னக்குஞ்சின் வாயில் விழ, அது உண்டு தவளையின் ஒலியைத் தாலாட்டுப் போல் கேட்டு ரசித்துத் தூங்கியது என அயோத்தியில் ஒரு அன்னக் குஞ்சு கூட இன்புற்று இருந்தது என்கிறது கம்பன் காவியம்.

சேலுண்ட ஒண்கணாரில் திரிகின்ற செங்கால்
அன்னம்
மாலுண்ட நளினப்பள்ளி வளர்த்திய
மழலைப்பிள்ளை
காலுண்ட சேற்று மேதி கன்றுள்ளிக் கனைப்பச்
சோர்ந்து
பாலுண்டு துயிலப் பச்சைத் தேரைதாராட்டும்
பண்ணை.

எருமைக் கன்று உண்ண வேண்டிய பாலை அன்னக் குஞ்சுக்குத் தியாகம் செய்கிறது. இராமனுக் கென்று இருந்த அரசை பரதனுக்குத் தியாகம் செய்த தசரதன் மாதிரி என்பது குறிப்பு.

ஞானசம்பந்தப் பெருமான் அவதரிக்கக் கூடிய சீர்காழியில் இயற்கையே வேள்வி செய் கிறது எனக்கூறுகிறார் சேக்கிழார். மாமரத்தில் உள்ள தேன் கூடு ஒழுகி, மாவிலையில் விழ, இலையினின் னும் ததும்பி வழிந்த தேன்துளி, மரத்தினடியில் உள்ள ஒரு பொய்கையில் உள்ள தாமரை மலரில் விழுகிறது. வேதியர்கள் மாவிலையில் நெய் எடுத்து வேள்வித்தீயில் ஆகுதி செய்வது மாதிரி சிவந்த தாமரை மலர்கள் வேள்வித்தீ போன்று காட்சியளிக் கின்றன.

பரந்த விளைவயல் செய்ய பங்கயமாம்
பொங்கெரியில்
வரம்பில் வளர்தேமாவின் கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்த நீள் இலைக் கடையால் ஒழுகுதலால்
நெடிதவ்வூர்
மரங்களும் ஆகுதி வேட்கும் தகையவென
மலர்ந்துளதால்

சீர்காழியில் பிறந்த அந்தணர் மட்டுமல்ல. இயற் கையே வேள்வி செய்கிறது என ஞானசம்பந்தர் குலத் தைச் சிறப்பித்தார் சேக்கிழார்.

★★★

செய்யுளின் சொல் தெளிவும்: ஆழ்ந்த ஆராய்ச்சி அறிவும் அதன் காரணமாகப் பெறும் உணர்ச்சியும் உண்டாகும்படி சிவனடிக்கு அன்பு செய்வார் என்று பொய்யடிமையில்லாத புலவர்கள் பற்றிப் பேசுகிறார் சேக்கிழார் பெருமான்.

செய்யுள் நிகழ் சொற்றெளிவும்: செவ்விய நூல்
பல நோக்கும்
மெய்யுணர்வின் பயன் இதுவே எனத் துணிந்து
விளங்கியொளிர்
மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானார்
பொய்யடிமையில்லாத புலவரெனப் புகழ் மிக்கார்.

இனிமையும் எளிமையுமே தமிழின் பெருமை என்பர் இலக்கண ஆசிரியர். அருமையான கவிதை நுகர்ந்து மகிழும் மகிழ்ச்சியே இன்பம் எனக் கூறி

சீதாபிராட்டி அவ்வாறு தோன்றினாள் **தீஞ்சுவை செஞ் சொற் கவியின்பம்** எனக்குறித்தருளினார். கவிதை தெளிவாக இருக்க வேண்டும்

பூமிக்கு அழகாக, நல்லபொருள்களைத் தந்து, வயல்களுக்குப் பயன்படுவதாக ஆகி, தன்னுள் அமைந்த பல நீர்த்துறைகளைக் கொண்டு குறிஞ்சி முதலான ஐந்து நிலப்பகுதிகளில் பரவிச் சென்று, நன்கு தெளிவுடையதாகி, குளிர்ந்த நீரோட்டம் உடையதாய், தெளிவாக, (பெரியோர்களின் கவிதைபோல) இருந்த கோதாவரி என நதியை வர்ணித்தார் கம்பர். **இதையே கவிதைக்கும் சிலேடையாக** நல்ல நூல்கள் வல்லோரால் அழகுபடுத்தப்பெறும் கவிதை. தன்னைக் கற்போருக்கு நுண்ணிய அறிவூட்டி ஆழ்ந்த பொருளை அறியச் செய்யும். களவு கற்பு முதலான பொருள்களைக் கூறீக் கேட்போர் உள்ளத்தைக் கவரும் பான்மை கொண்டது. சேர்தல், இருத்தல், பிரிதல், ஊடல், இரங்கல் என்ற நெறியில் பரந்து மயக்கத்திற்கு இடமில்லாமல் விளங்கும்படி செய்வது தமிழ்க் கவிதை.

புவியினுக்கு அணியாய்: ஆன்றபொருள் தந்து :
புலத்திற்றாகி
அவியகத்துறைகள் தரங்கி ஐந்திணை நெறியளாவி
சவியுறத் தெளிந்து தண்ணென்
ஒழுக்கமும் தழுவி : சான்றோர்
கவியெனக் கிடந்த கோதாவரியினை
வீரர் கண்டார்.

முதல் நாள் போரில் தோல்வி கண்ட இராவணன் தன் பாட்டனான மாலியவானிடம் இராமபாணத்தின் பெருமையைக் கூறும்போது ''நல்ல புலவர் பெருமக்களின் நாவுகளிலிருந்து தோன்றி அவர்களது கருத்துக்களைத் தெளிவாகப் புலப்படுத்தி அமையும் அறிவு நிறைந்த சொற்கள் போல; அவற்றின் தொடர்ச்சியாக வரும் கருத்துக்கள் போலவும் உணர்ச்சி நிறைந்த ஓசை போல இராம பாணம் இருந்தது. இராமனின் அம்புகள் குறித்த இலக்கையே தாக்கி, ஒன்றன்பின் ஒன்றாகத் தொடர்ந்து வருதலும் படிப்பவர் மீண்டும் படிக்க வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்கும் கவிதைகளைப்போல மீண்டும் போரில் அவனுடன் ஈடுபட வேண்டும் என்ற எண்ணத்தை உண்டாக்குகின்றன'' என்றார். கவிக்கூற்றாக கம்பர் முன்னமேயே இராமபாணத்தை **சொல்லொக்கும் கடிய வேகச் சுடுசரம்** எனக் குறித்தருளினார்.

நல்லியல் கவிஞர் நாவில் பொருள் குறித்து
அமைந்த ஞானச்
சொல் என: செய்யுள் கொண்ட தொடையென:
தொடையை நீக்கி
எல்லையில் செல்வம் தீரா இசையெனப் பழுதிலாத
பல்லலங்காரப் பண்பே காகுத்தன் பகழிமாதே

சேக்கிழார் - கம்பர் ஆகிய இரு கவிச்சக்கரவர்த்திகளும் கவிதையைப்பற்றி வர்ணனை செய்வதை யார் எப்படி வர்ணிக்க முடியும்? அவர் தம் பெருமை வாழ்க!

கம்பனும் திருமுறைகளும் என்ற தலைப்பில் ஒன்பது கட்டுரைகளில் கூறி அன்பர்கட்கு அறிவித்தோம். இனிக் ''கண்பன் கண்ட சிவன்'' ஒவ்வொரு காண்டத்திலும் எங்கெங்கே கூறியுள்ளார் என்பதை அன்பர்கட்குக் காட்டி இன்புறுத்தி நாமும் இன்பமடைவோம்!

வாழிய கம்பன் புகழ்!
வாழிய சேக்கிழார் பெருமை!

★★★

## வட்டியை வாங்குதல் குற்றம்

வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர்
வட்டியை வளர்க்கின்ற மார்க்கத்தை அறியீர்....
எட்டிபோல் வாழ்கின்றீர்! கொட்டிபோல் கிளைத்தீர்
எத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே

- அருட்பிரகாச வள்ளலார்

# மகாகவி பிள்ளையவர்கள் அளித்துள்ள மாவிருந்து

- அங்கயற்கண்ணி அடிமை

மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் நந்தமிழ்நாட்டு மக்கள் இன்புறுமாறு செய்த நூல்களில் உள்ள பல கற்பனை நிறைந்த கருத்துக்களைக் கண்டு இன்புறுவோம். அப்பெருமகனார் எழுதிய பல நூல்கள் கிடைக்கவில்லை. கிடைத்தவற்றினின்று இயன்றதை எழுதுகிறோம்.

இப்புலவர் பெருமான் அருளிச் செய்துள்ள குமரகுருபர சுவாமிகளின் சாத்திரம் கற்பனை வளம் நிரம்பிய ஒரு அழகிய நூலாக விளங்குகின்றது.

அம்மையும் சிவபெருமானும் அரசுபுரிந்த மதுரையைத் தலைநகராகக் கொண்டது பாண்டி வளநாடு. அம்மையின் திருநாமம் அங்கயற்கண்ணி. (அழகிய மீன் போன்ற கண்ணையுடையவள்) பாண்டி நாட்டின் கொடி மீன்கொடி, எனவே தமது கொடியும் பெயரும் கொண்ட அம்மையின் நாடு என்பதால் களிப்புக் கொண்டு மீன்கள் துள்ளி விளையாடின என மீன்கள் துள்ளியதற்குக் காரணம் கூறினார்.

சிவபெருமான் மதுரையில் மீனாட்சியம்மையைத் திருமணம் செய்து கொண்டார். முருகப் பெருமான், வேதபுருடனான பிரமன் மந்திரம் கூற, சூரிய சந்திரர்கள் தீபமேந்த, பார்வதி பரமேஸ்வரர் மனங் களிக்க, தேவேந்திரன் தாரைவார்க்க, தெய்வானையம்மையைத் திருமணம் புரிந்தார். மதுரையை அடுத்த திருப்பரங்குன்றில் நடந்தது இத்திருமணம்

சுருதிமழை பிலிற்றியிடும் சதுமுகனார்
சடங்கியற்றத் தோகைபாகன்
கருதி விழி விருந்தருந்த: கண்ணிறைந்த
மேனியான் கைந்நீர் வார்ப்ப
தருதியெனக் கையேந்தி: பரிதிமதி விளக்கேந்த :
தந்திமாதை
வருதியெனக்கைப் பிடித்துப் பரங்கிரியில்
மணந்தவனை வணக்கம் செய்வாம்

என அத்திருமணத்தைத் துதித்துப் பாடுகிறது திருப்பரங்கிரிப் புராணம்.

இத்தகைய பாண்டி நாட்டில் தாமிரபரணி நதியின் வடகரையில் உள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் திருத்தலத்திற்கு வடதிசையில் உள்ள ஸ்ரீகைலாசம் என்ற இடத்தில் சிவபக்தியும் தமிழ்ப்புலமையும் நிறைந்த வேளாள குலத்தில் சண்முகசிகாமணிக் கவிராயர் தன் மனைவியான சிவகாமசுந்தரியுடன் வாழ்ந்திருந்தனர். வெகுநாட்கள் மக்கட் பேறில்லாதிருந்து ஒரு ஆண் குழந்தை கிடைக்கப்பெற்று குமரகுருபரன் எனப் பெயரிட்டு வளர்த்தனர். இரண்டு வயதாகியும் குழந்தை வாய் திறந்து பேசவில்லை. தமது புலமையினால் பிறரை வாய் திறக்க முடியாத ஊமைகளாகச் செய்யும் ஆற்றல் படைத்த அக்குழந்தையை ஊமையென்று நினைத்தனர். **கலை தேர்ந்தார்கள் யாவரையும் மூங்கை யாக்கி விடுவாரை மூங்கையாரெனத் தெளிந்தார்** எனப்பாடுகிறார் பிள்ளையவர்கள்.

திருச்செந்தூர் முருகப்பெருமான் அருளால் கிடைத்த குழந்தையை ஊமை என உற்றார் உறவினர் ஏளனம் செய்வதைத் தாங்க முடியாத தாய் தந்தையர் திருச்செந்தூர்ப் பெருமான் திருமுன்னரே குழந்தையைக் கொண்டுவிட எண்ணி அத்தலத்தையடைந்தனர். புறப்படும்போது அந்தணர் இருவர் எதிர்வர கன்றும் தாயுமாக வரும் பசு முதலான நன்னிமித்தங்களைக் கண்டு மகிழ்ந்தனர்.

எல்லா முருகத்தலங்களும் மலைமேலிருக்கத் திருச்செந்தூர் மட்டும் கடற்கரை ஓரத்தில் உள்ளது. ''பிறவியெனும் கடலில் வீழ்ந்து தவிப்போரை நான் கைதூக்கிவிடுவேன் என்பது போல கடற்கரை ஓரத்தில் எழுந்தருளியுள்ளார்'' என ஆதிசங்கரர் கூறினார் சுப்ரமணிய புஜங்கம் என்ற நூலில்.

என் முன்னர் வந்தோர் பிறப்பென்ற வேலை
யினை யேறினாரென்று நிலமேல் விளக்கித்
துன்னும் கடற் செந்தில் உறைகின்ற தூயோன்
துங்கபராசக்தி அருள் சேயை நினைவாம்

தமிழாக்கம் - கோவை கவியரசு
திரு நடேசக்கவுண்டர் அவர்கள்

திருச்செந்தூரையடைந்தனர். திருமுருகனைக் கண்டு களித்தனர். அத்தலத்தில் பன்னீர் இலையில் விபூதிப் பிரசாதம் கொடுத்தல் வழக்கம். ''திருச்செந்தூர் முருகப் பெருமானை வணங்குவோர்க்கு என்றும் துன்பம் இல்லை. பகை இல்லை. நோயும் நரகமும் இல்லை. மீண்டும் பிறப்பில்லை என்று கூறுவது போல் இலைவிபூதியளித்தனர் என்கிறார் பிள்ளையவர்கள்.

இலையயில் குமரவேள் முன் வணங்குவார்க்கு
என்றும் துன்பம்
இலை : பகை சற்றேனுமிலை : படுபிணி நிரப்பும்
இலை : அளற்று உழன்று வீழ்தல் இலை:
பவபவத்துச் சார்பும்
இலையென இலைவிபூதி எடுத்தெடுத்து
உதவல் கண்டார்.

இத்தகைய இலை விபூதியணிந்த காலத்துக் குழந்தைக்கு ஞானம் ஏற்பட்டதுடன் வாய் திறந்து ''பூமேவு செங்கமலப் புத்தேளும்'' என ஆரம்பித்து கந்தர் கலி வெண்பா என்ற அழகிய நூலைப்பாடி யருளினார். தமிழ்த் தெய்வமான முருகனையே முதல் பாட்டாகப் பாடியதால் அவர் தமிழ்ப்புலமை வெகு மேன்மையாக விளங்கலாயிற்று.

அத்தகைய பெரியவர் மதுரையம்பதியை அடைந்தார். அம்மை மீனாட்சி குமரகுருபரருக்கு அழகிய குழந்தையுருவாகக் காட்சிதர மகிழ்ச்சி யடைந்து மீனாட்சியம்மை பிள்ளைத் தமிழ் பாடினார்.

வணங்கி நிற்பாருக்கெல்லாம் உலகமும்
வாய்ப்ப என்றும்
குணங்கெழு குமரியேயாய் எற்றைக்கும்
குலவும் அன்னை
இணங்குறு மகவாம் தெய்வக் கோலம்
அங்கினிது காட்ட
உணங்கிய வினையார் கண்டு
முடிதராவுவகையுற்று.

தெய்வங்களையோ பெரியோர்களையோ குழந்தை யாக எண்ணித் தம்மைத் தாய்போல் எண ணிப்பாடுவது தமிழிலுள்ள 96 வகைப் பிரபந்தங்களில் பிள்ளைத் தமிழ் எனப்படும். பெண்பால் பிள்ளைத் தமிழாக குமரகுருபரர் மீனாட்சியம்மை மீது காப்புப் பருவம், செங்கீரைப் பருவம். தாலப் பருவம், சப் பாணிப் பருவம், முத்தப்பருவம், வருகைப்பருவம், அம்புலிப் பருவம், அம்மானைப் பருவம், நீராடற் பருவம், ஊசற்பருவம் என்ற பத்துப் பருவங்களை 102 பாடல்களில் பாடி முடித்தார்.

அக்காலத்தில் மதுரையை ஆண்ட மீனாட்சி யின் பக்தரான திருமலை நாயகரின் கனவில் தோன்றி ''குமரகுருபரர் பாடியுள்ள நம் பிள்ளைத் தமிழை அரங்கேற்றுக'' என உத்திரவிட்டாள் மீனாட்சியம்மை. மகிழ்ச்சி கொண்ட நாயக மன்னர் அம்மையின் சன்னிதியிலேயே அரங்கேற்றத்திற்கு ஏற்பாடு செய்து நடத்தினார். ஆறாவது நாள் வருகைப்பருவம் அரங் கேறிக்கொண்டிருந்தது. அம்மை மீனாட்சி திருமலை மன்னரின் மடியில் அமர்ந்து ஒருசிறு குழந்தை யுருவங்கொண்டு கேட்டுக் கொண்டிருந்தாள்.

''பழைய பாடலாகிய வேதத்தின் பயனே! தமிழின் சுவையே! ஆணவமான கிழங்கைத் தம் மிடமிருந்து தோண்டியெறிந்து வாழும் அடியார்களின் உள்ளத்தில் விளங்கும் ஞானவிளக்கே! இமைய மலையில் விளையாடிய பெண்யானை போன்றவளே! உலகநாயகனான சிவபெருமானின் உள்ளத்தில் விளங் கும் ஓவியமே! வண்டுகள் தேனையுண்டு வாழ்வ தற்காகத் தேன் கிண்ணங்களை மலர்களை கூந்தலில் சூடியுள்ள வஞ்சிக்கொடியே! மதுரை அரசனாக விளங் கிய மலயத்துவசபாண்டியன் மகளே! வருக! வருக!!''

தொடுக்கும் கடவுள் பழம்பாடல்
தொடையின் பயனே! நறை பழுத்த
துறைத் தீந்தமிழின் ஒழுகும் நறுஞ்
சுவையே! அகந்தைக் கிழங்கை அகழ்ந்து
எடுக்கும் தொழும்பர் உளக் கோயிற்கு
ஏற்றும் விளக்கே! வளர்சிமய
இமயப்பொருப்பில் விளையாடும்
இளமென்பிடியே! எறி தரங்கம்
உடுக்கும் புவனம் கடந்து நின்ற
ஒருவன் திருவுள்ளத்தில் அழகு
ஒழுக எழுதிப்பார்த்திருக்கும்
உயிரோவியமே! மதுகரம் வாய்
மடுக்கும் குழற்காடு ஏந்தும் இள
வஞ்சிக் கொடியே! வருக! வருகவே!
மலையத்துவசன் பெற்ற பெரு
வாழ்வே வருக! வருகவே!

என்ற பாடலைப் பாடிய போது நாயகமன்னரின் மடியில் குழந்தை உருவில் அமர்ந்திருந்த அம்மை எழுந்து தன் கழுத்திலிருந்த முத்துமாலையை குமர குருபர சுவாமிகளின் கழுத்திலிட்டுத் திருவுரு மறைந் தாள். பின்னர் சிறிது காலம் மதுரையில் தங்கியிருந்து **மதுரைக் கலம்பகம்** என்ற நூலை இயற்றியருளினார். ''உலகை ஈன்ற அம்மை மதுரை அரசியாகவும், இறைவன் சோமசுந்தரபாண்டியனாகவும் முருகப் பெருமான் உக்கிர குமாரபாண்டியனாகவும் வந்தது தமிழின் சுவையறிந்து இன்புறத்தான் போலும்!'' என்று தெய்வங்கள் கூடத் தமிழ் மொழிமேல் பற்றுள்ள தன்மையில் விளங்கின என்கிறார். **தெய்வங்கள் மதித்த தெய்வீக மொழி தமிழ்** என எண்ணி மகிழ்வோ மாக. அப்பொழுது திருமலைநாயகர் நல்ல வருவா யுடைய அரிய நாயகிபுரம் என்ற ஒரு ஊரை நம் குமர குருபரருக்கு அளித்து ஒரு நீதிநூல் எழுதுமாறு வேண்டிக் கொள்ள **நீதி நெறி விளக்கம்** என்ற நீதி நூலை அருளிச் செய்தார். இது சிதம்பரத் தலத்தில் செய்யப்பட்டதாகக் கூறுகிறார் தமிழ்த்தாத்தா. ''கலை மகள் பிரமனின் நாவில் வசித்தபோதும், பிரமன் தமிழ்ப் புலவர்கட்கு ஈடாக மாட்டான். பிரமனின் படைப்புக்கள் அழியக்கூடியவை. ஆனால் புலவர் களின் படைப்புக்களான கவிதைகள் என்றும் அழியாது வாழ்கின்றன'' என கல்விமான்களின் பெருமை கூறினார்.

கலைமகள் வாழ்க்கை முகத்தன் எனினும்
மலரவன் வண்டமி ழோர்க்கு ஒவ்வான் -
மலரவன் செய்

வெற்றுடம்பு மாய்வனபோல் மாயா : புகழ்கொண்டு
மற்றிவர் செய்யும் உடம்பு.

நீதி நெறிவிளக்கம் தமிழ் நாட்டிற்கு வழிகாட்டும் ஒரு நிதி என்றால் அது மிகையாகாது. மேலும் நாயகர் அளித்த சன்மானங்கள் யாவற்றையும் தமது ஆசிரியருக்கு அர்ப்பணித்ததாக வரலாறு.

பின்னர் சோழநாடு புகுந்து புள்ளிருக்கும் வேளூர் என்றும் வைத்தீச்சுரம் என்னும் தலத்திலுள்ள முருகப்பெருமான் மீது **முத்துக் குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்** பாடிச் சிதம்பரம் சென்று **சிதம்பரம் மும்மணிக் கோவை** பாடியருளினார். இதன் பின்னர் யாப்பிலக்கணத்தில் எத்தனை விதமான கவிகள் பாடமுடியுமோ அத்தனை விதமான பாடல்களும் அடங்கியதாகச் **சிதம்பரச் செய்யுட் கோவை** என்ற நூலையும் பாடியருளினார். குமரகுருபரரின் பாடல்கள் சொற் சுவை பொருட் சுவையுள்ளவை மட்டுமல்ல - **படிப்போருக்கு இலக்கண அறிவையும் அளிக்கும்** என்பது ஒரு தெய்வீக உண்மை.

இது தவிர தமது குருவான தருமை மாசிலா மணி தேசிகரை பரமசிவனாகவே கண்டு ''சிவபெருமான் கலைகளுள்ள மதியான சந்திரனைத் தாங்கினார். எமது கலைஞானம் நிறைந்த புத்தி என்ற மதியையுடையவர். மானை (அம்மையை) இடத்திலே கொண்டார் சிவபெருமான் மானிடனான மனித வுருவுடன் விளங்குகிறார் எம்குரு: எலும்பை (எற்பு) அணியாது (எற்பணி) என் தொண்டாகிய பணிபூண்டு என்றெல்லாம் இரட்டுறக்கூறி நமக்கு இன்பமளிக்கின்றார்.

தலைப்படு கலைமதி தாங்காது : ஆங்கு அத்
தலைப்படு கலைமதி தாங்கி : நிலைப்படு
மான்இடனாய வடிவு கொண்டருளாது
மானிடனானய வடிவு கொண்டருளி
எற்பு அணிபூணாது: எற் பணிபூண்டு
பாரிடம் சூழாது பாரிடம் சூழ்தர
ஆருரமர்ந்த ஞானசம்பந்த

''பாரிடம் என்ற பூதங்கள் சூழாமல் பாரிடமான பூமியிலே தோன்றிய குருநாத'' என்ற விளிமிகவும் அழகியது.

துறவு பெற்றுக்காசித் தலத்தையடைந்து காசிக் கலம்பகம் என்ற நூலையருளினார் ''காசியில் தவம் செய்ய வேண்டாம். நீண்ட நித்திரை (மரணம்) அடைந்தால் முத்தி பெற்று பிரமனையும் அடிமையாக்கிக் கொள்ளலாம்'' என்கிறார்

முயலாமலே முத்தித் திருவை முயங்க நல்கும்
கயலார் பெருந்தடங்கண்ணிபங்கர் அருட்
காசியிலே
செயலாவ தொன்றில்லை: நெடுந் துயில்
செய்யும் உங்கள்
பயலாகவே பணி செய்வார் புவனம் படைப்பவரே.

அக்காலத்தில் காசியை அரசு செய்த பாதுஷாவிடம் பேச விரும்பிய குமரகுருபரர் ''மண்ணை யாளும் மன்னவர் என் செய்யுளைக் கேட்டவுடன் என்னிடம் அன்புகாட்ட வேண்டும். பலதெய்வங்களிருந்தாலும் உன் போல கண் கண்ட தெய்வமும் உளதோ'' எனக் கலைமகளைக் குறித்துச் **சகல கலா வல்லி மாலை** பாடியருளினார்.

மண் கொண்ட வெண்குடைக் கீழாக மேற்பட்ட
மன்னரும் என்
பண்கண்டளவில் பணியச் செய்வாய்!
படைப்போன் முதலாம்
விண்கண்ட தெய்வம் பல்கோடி உண்டேனும்
விளம்பில் உன்போல
கண்கண்ட தெய்வம்
உண்டோ சகலகலா வல்லியே.

இந்த 10 பாடல்கள் பாடி முடிந்ததும் குமரகுருபரருக்கு இந்தி மொழியறிவு உண்டாயது. ஒரு சிங்கத்தின் முதுகிலேறி அமர்ந்து பாதுஷாவிடம் சென்றார். பாதுஷா இவர் மீது ஈடுபாடு கொண்டு கேதார கட்டத்தில் காசிமடம் அமைப்பதற்கு இடம் உதவினார். அந்த குருபரம்பரையே இன்று ''காசிவாசி'' என்ற திருநாமத்துடன் திருப்பனந்தாள் திருமடமாக விளங்குகின்றது.

சகல கலாவல்லிமாலையைப் பாராயணம் செய்வோர்க்கு இன்றைக்கும் கல்வியறிவு மிக மிக அதிகமாக ஏற்படும் என்பது கண்கூடு.


குமரகுருபரர் காசி மடத்தில் தமிழிலக்கியங்களை இந்தி மொழியில் சொற்பெருக்காற்ற அதைச் செவிமடுத்த துளசிதாசர் என்ற இராமபக்தர் 'கம்ப ராமாயணக்'' கருத்துக்களை அறிந்து தமது துளசி ராமாயணத்திலும் அமைத்துக் கொண்டார் என்பது வரலாறு.

குமரகுருபரர் ஒரு முறை தருமபுரம் வந்து தமது ஆசிரியரை தரிசித்து மீண்டும் காசி திரும்பி ஒரு வைகாசி மாதம் கிருஷ்ணபக்ஷம் திருதியையில் சிவ பெருமான் திருவடி நிழலில் கலந்தார்.

குமரகுருபரர் சுவாமிகளின் பிரபந்தத்திரட்டு என்று திருப்பனந்தாள் காசிமடம் வெளியிட்டுள்ள நூல் தேனும் பாலும் கலந்த தெய்வீக நூலாகும். அன்பர்கள் அதைப்படித்துத் தமிழின்பம் நுகர்ந்து பேரானந்தப் பெருவாழ்வு வாழ இறைவனருள் புரிய வேண்டுகிறோம்.

எந்தன் செந்தமிழ் எந்தன் செந்தமிழ்
என்று புகழ்வேனே!
எந்தாய் மொழியென எந்தாய்மொழியென
என்றும் மகிழ்வேனே.

★★★





சென்னை வண்ணாரப்பேட்டை அருள்மிகு சின்ன சேணியம்மன் திருக்கோவிலில் அருள்மிகு வடபத்திரகாளியம்மன் சந்நிதி நூதனவிமான திருக்குட நீராட்டு விழா 24.1.99 அன்று சிறப்புற நடைபெற்றது. மாண்புமிகு தமிழ் வளர்ச்சி, தமிழ்ப்பண்பாடு மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். சென்னை இணை ஆணையாளர்: திரு கோ. பக்கிரிசாமி பி.ஏ.,பிஎல். அவர்கள் முன்னிலையில் இவ்விழா சிறப்புற நடைபெற்றது. திருக்கோயில் செயல் அலுவலர் வீ. சேகர் விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்.

 பதிவு எண். T.N (MSC) 7039 / WPP / 325 / 99



சென்னையிலுள்ள அருள்மிகு சென்னமல்லீசுவரர் திருக்கோயில் திருக்குடநீராட்டு விழா 29.1.99 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்வளர்ச்சி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை சிறப்பு ஆணையாளர் மற்றும் ஆணையாளர் திருமிகு சுகவனேஸ்வர் இ.ஆ.ப. கூடுதல் ஆணையாளர் திரு எஸ். கனகைய்யா, பி.எஸ்.சி, பி.எல். ஆகியோர் இவ்விழா வில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். பரம்பரை தர்மகர்த்தா திரு மணலி இராம கிருஷ்ண முதலியார் பி.ஏ. மற்றும் மேலாளர் அ. தனபாலன், பி.ஏ. ஆகியோர் திருக்குட நீராட்டு விழா ஏற்பாடுகளைச் சிறப்புறச் செய்திருந்தார்கள்.

வெளியிடுபவர் : ஆணையர், தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர் த. அமிர்தலிங்கம், எம்.ஏ.பி.எச்.டி.,
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட்.**, 142, ஜானி ஜான் கான் தெரு, சென்னை - 600 014.